Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 25 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்ஹிஜ்ஜா 08 (08.02.2003) சனிக்கிழமை இதழ் :129

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து

SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.


ராம்கோ ராம்கோ


MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து

(சி-553)

## கடற்புலி மேஜர், இரு கப்டன்கள் நெடுந்தீவுச் சம்பவத்தில் வீரச்சாவு!


கரும்புலி மேஜர் ஆற்றலோன்/சுதன்
(கிருஷ்ணசாமி சதீஸ்வரன்- சாவகச்சேரி, யாழ்ப்பாணம்)


கடற்புலி கப்டன் பொதிகைத் தேவன்
(சிவஞானசுந்தரமூர்த்தி தயாபரன்- புலோலி தெற்கு, பருத்தித்துறை)


கடற்புலி கப்டன் அன்பன்/ஊர்வண்ணன்
(இராசையா குகதாஸ் - அரியாலை, யாழ்ப்பாணம்).

### நெடுந்தீவுக்கடலில் வீரச்சாவடைந்த போராளிகள் நினைவாக

## தாயகப் பகுதிகளில் இன்று துக்கதினம்!

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் கடற்படையினர் விடுதலைப் புலிகளின் படகை வழி மறித்திருந்தபோது வீரச்சாவைத் தழுவிய மூன்று போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்தும் வகையில் இன்றைய தினம் தமிழர் தாயகப் பகுதியெங்கும் துக்கதினமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

நேற்றையதினம், நெடுந்தீவுக் கடற்பரப்பில் கடற்படையினரால் தமது படகு வழிமறிக்கப்பட்டு கடற்படையினரால் படகு தடுக்கப்பட்டிருந்தபோது அப்படகில் பயணம் செய்த மூன்று போராளிகளும் வீரச்சாவடைந்தனர்.

நிரந்தர சமாதானத்திற்காக அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற இந்தவேளையில் கடற்படையினரின் அத்துமீறிய இந்தச் செயலைக் கண்டித்தும் வீரச்சாவடைந்த போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் இன்றைய துக்கதினம் அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது.

இன்று அனைத்துப் பகுதிகளும் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டு வீதிகள், பொது இடங்கள் ஆகியவற்றில் கறுப்புக்கொடிகளை பறக்கவிட்டும், சோககீதங்களை இசைத்தும் (10ஆம் பக்கம் பார்க்க)

### கடற்படையினரால் தடுக்கப்பட்டது கடற்புலிகளின் மீன்பிடிப் படகு

# கண்காணிப்புக் குழுவின் பொறுப்பிலிருந்தபோது

# மூன்று கடற்புலிப் போராளிகள் உயிர் துறப்பு!




பேர்ளினில் நேற்று ஆரம்பமான பேச்சுக்களின்போது...
(மேலும் படங்கள் பக்கம் இரண்டில்)

### நெடுந்தீவுக் கடலில் நேற்று நடந்த துயரம்

(யாழ்ப்பாணம்)

**மீன்பிடிக்கச் சென்றபோது பழுதடைந்த நிலையில் கடலில் தரித்துநின்ற கடற்புலிகளின் படகு கடற்படையினரால் தடுக்கப்பட்டு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பொறுப்பிலிருந்தபோது நடந்த சம்பவத்தில் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்தனர்.**

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியற்துறை வெளியிட்ட முழுமையான அறிக்கை விபரம் வருமாறு,

06.02.2003 அன்று அதிகாலை வழமைபோல நாச்சிக்குடாப் பகுதியில் மீன்பிடிக்க எமது மீன்பிடி வள்ளம் சென்று கொண்டிருந்தபோது ஏற்பட்ட இயந்திரக்கோளாறால் நெடுந்தீவுக்கு மேற்காக நகரமுடியாது நின்றது.

பழுதடைந்து நின்ற மீன்பிடி வள்ளத்தை கரையிலிருந்து சென்ற எமது விரைவுப்படகு நண்பகல் 11 மணியளவில் நாச்சிக்குடா நோக்கி இழுத்துக்கொண்டு வந்தது. அவ்வேளை அவர்களை நோக்கி சிறிலங்கா கடற்படையினர் வந்தபோது, விரைவுப் படகினர் டோறாவுக்கு அருகில் சென்று விபரம் கூறினர்.

பின்னர் தொடர்ந்து விரைவுப் படகு வள்ளத்தைக் கட்டியிழுத்துக் கொண்டு வந்தது. மீண்டும் மாலை 3 மணிக்கு கண்காணிப்புக்குழுவுடன் வந்த மற்றைய டோறா சோதனையிட வேண்டுமென வலியுறுத்தியது.
(10ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவும் கடற்படையும் நியாயமான முறையில் நடக்கவில்லை!

### பேர்ளின் பேச்சுக்களில் புலிகள் கடும் ஆட்சேபம்

(பேர்ளின்)

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஐந்தாவது கட்ட சமாதானப் பேச்சுவார்த்தை, ஐரோப்பிய நேரப்படி நேற்றுக்காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது.

முதலாவது அமர்வில் - நெடுந்தீவில் விடுதலைப் புலிகளின் படகு கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டு கண்காணிப்புக்குழுவின் பொறுப்பிலிருந்தபோது மூன்று போராளிகள் வீரச்சாவெய்திய விடயம் பற்றி தீவிரமாக ஆராயப்பட்டது.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் மூன்று போராளிகளும் வீரச்சாவடைந்த சம்பவத்தில் கடற்படையினரும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரும் நீதியான முறையில் நடந்துகொள்ளவில்லை என (10ஆம் பக்கம் பார்க்க)




ஹெல்கிசனோடு தீவிர ஆலோசனையில் தமிழ்ச்செல்வன், பாலசிங்கம்.

## நெடுந்தீவுச் சம்பவம் தீவிரமானது அமைதியைப் பாதிக்காது - பீரிஸ்

நெடுந்தீவுச் சம்பவம் தீவிரமானதொன்று. ஆனால் அமைதி வழிமுறைகளைப் பாதிக்காது. இவ்வாறு அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார். பேர்ளினில் பேச்சுக்களுக்கு நடுவே செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இத்தகைய சம்பவம் நடப்பது முதன்முறையல்ல. அமைதி வழிமுறை இதனால் (10ஆம் பக்கம் பார்க்க)

# பேர்ளின் சமாதானப் பேச்சுவார்த்தையிலிருந்து...


பேர்ளினில் நேற்று ஆரம்பமான சமாதானப் பேச்சுக்களின்போது கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் பேராசிரியர் பீரிஸும் கைலாகு கொடுத்துக்கொள்வதை முதலிரு படங்களிலும், அன்ரன் பாலசிங்கம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரினுடன் கலந்துரையாடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.





பேச்சுக்களில் கலந்துகொண்ட நோர்வேத் தூதுவர் வெஸ்பேர்க், அரசு தரப்புப் பிரதிநிதிகளான மிலிந்த மொறகொட, பீரிஸ், ரவூப் ஹக்கீம், பேணாட் குணதிலக ஆகியோரை முதலாவது படத்திலும், விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்முடன் பேர்ளினிலுள்ள நோர்வேத் தூதரகத்தில் கலந்துரையாடிக் கொண்டிருப்பதை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம்.

## தேசத்துக்காக உயிர் நீத்த தமிழ் மறவனின் 2 ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயக மண்ணில் மலர்வு
29 - 09 - 1979



தாயக மண்ணில் உதிர்வு
31 - 01 - 2001

**செல்வநாயகம் துஷாந்தன் (கப்டன் மருது)**
**இம்ரான் பாண்டியன் படையணி**

வீட்டினை மறந்து நாட்டினைக் காக்க
வீறிடும் புலியின் அணியிலே நின்று
ஆற்றிடும் சேவையால் தெல்லிப்பழையூரில்
காற்றிலே கரைந்து காவியமானாய்
போற்றிடும் உன்னை ஊரும் உலகும்
தேற்றுகின்றோம் உன் திறமை மெச்சியே.

*வீராங்கொடை.* (231) பெற்றோர், உறவினர்கள், நண்பர்கள்.

**அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு (மார்ச்-8)**
**யாழ்ப்பாண சமூக செயற்பாட்டு மையமும்,**
**மகளிர் அபிவிருத்தி நிலையமும் இணைந்து நடாத்தவுள்ள**

## நாடகப் போட்டி

**விண்ணப்பிக்கத் தகுதியுள்ள சமூக நிறுவனங்கள்**
* ✷ சனசமூக நிலையங்கள்
* ✷ மகளிர் அமைப்புக்கள்
* ✷ ஏனைய தொண்டர் நிறுவனங்கள்

**நாடக எழுத்துருவின் கருப்பொருள்**
* ✷ சமூகத்தில் மகளிர் எதிர் கொள்ளும் வன்முறைகள்
* ✷ சமாதானத்தில் மகளிர் பங்கு
* ✷ அகதியாக வாழும் மகளிர் எதிர்கொள்ளும் அவலங்கள்

**காலம் ஒப்பனை**
20-25 நிமிடங்கள்
ஒப்பனை அலங்காரம், மேடை அமைப்பு, எளிமையாக அமைத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி**
15-02-2003 சனிக்கிழமை

போட்டிகள் பிரதேச செயலக ரீதியாக நடத்தப்படும். தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த நாடகம் மகளிர் தினத்தன்று மேடை ஏற்றப்படும். தேர்வு பெறும் சிறந்த நாடகங்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரிகள்:**

J.S.A.C,
159, 4 ஆம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

மகளிர் அபிவிருத்தி நிலையம்,
7, கே.கே.எஸ். வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(232)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**
SPOKEN ENGLISH WITH GRAMMAR
N.VIGNESWARAN ARCHERY
*BLACK ROAD, CHANKANAI.*
*426 (302), K.K.S. ROAD,*
*JAFFNA.*
(சி-546)

**ராஜா** யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தினவெளியீடு
விஜய், ஸ்நேகா நடித்த
வசீகரா



10.30, 2.30, 6.00, 9.30 (சி-545)
ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.

**நிரஞ்சனாஸ்** சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
சூர்யா, ஜோதிகா நடித்த
உயிரிலே கலந்தது
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 காட்சி!
THE MUMMY RETURNS (சி-544)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## கலைப்பீடம்

### கலைப்பீடப் பரீட்சைகள் 2002/2003

கலைப்பீட மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களின் முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் யாவும் பின்வரும் ஒழுங்கில் ஆரம்பமாகின்றன.

1. மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு - 10/02/2003
2. இரண்டாம் வருட முதலாம் அரையாண்டு
   நான்காம் வருட முதலாம் அரையாண்டு - 24/02/2003
3. இராமநாதன் நுண்கலைக்கழக இரண்டாம் வருட முதலாம் அரையாண்டு - 10/02/2003
   (இசை, நடனத்தை ஒரு பாட அலகாக தோற்றும் 2 ஆம் வருட கலைப்பீட மாணவர்களுக்கும்)
4. இராமநாதன் நுண்கலைக்கழக மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு - 13/02/2003
   (இசை, நடனத்தை ஒரு பாட அலகாக தோற்றும் 3 ம் வருட கலைப்பீட மாணவர்களுக்கும்)
5. இராமநாதன் நுண்கலைக்கழக நான்காம் வருட முதலாம் அரையாண்டு - 14/02/2003
   (சித்திரமும் வடிவமைப்பும் மட்டும்)

குறிப்பு:-
10/02/2003ம் திகதி ஆரம்பமாகும் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. 08/02/2003 சனிக்கிழமையும் வழங்கப்படுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

07-02-2003 (சி/571) - பதிவாளர்.

## "BENGAL TIGER" கங்குலிக்கு வாழ்த்துக்கள்...



இன்று தனது 31 ஆவது அகவையை தென்னாபிரிக்காவில் கோலாகலத்துடன் கொண்டாடும் அழகும் ஆளுமையும் கொண்ட இந்தியக் கிரிக்கெட் அணித் தலைவர்

அதிரடிப்புயல்
**சௌரவ் கங்குலியை**

வாழ்த்துவதோடு 8 ஆவது உலகக்கிண்ணத்தை வெற்றி கொள்ளவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Come on India.

*இந்திய அணியினதும் ஆசை*
*கங்குலியினதும் அரியாலை ரசிகர்கள்:-*
மதி, மனோ, அன்பு, விக்கி, விந், குமண்ஸ், சிவா, சத், தஜி, வஜி, துஷி, துஷா, திரு, டினேஷ், வரன் ..... மற்றும் அனைத்து இந்திய ரசிகர்கள். (233)

## திரைப்பட உருவாக்கல் பயிலரங்கு

யாழ்.பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புக்கள் அலகும், பிரித்தானியாவைச் சேர்ந்த 'ஸ்கிறிப்நெற்' நிறுவனமும் இணைந்து ஏற்பாடுசெய்துள்ள திரைப்பட உருவாக்கம் பற்றிய இரண்டாம் கட்டப் பயிலரங்கு கடந்த 3 ஆம் திகதி முதல் யாழ்.பல்கலைக் கழக சிற்றிஹோலில் நடைபெற்று வருகின்றது.

இது 13 ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும். சென்ற டிசம்பர் மாதம் நடைபெற்ற முதற் கட்டப் பயிலரங்கு - திரைப்படப் பிரதியாக்கம் பற்றிய விபரங்களுக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டது. முதற் கட்டப் பயிலரங்கில் கலந்துகொண்ட 30 பேரிடமிருந்து குறுந்திரைப்படப் பிரதிகள் பெறப்பட்டு, அதில் 15 பேரின் பிரதிகள் தோந்தெடுக்கப் பட்டன.

அத்தேர்வாளர்களே இரண்டாம் கட்டப் பயிலரங்கில் கலந்துகொள்கின்றனர். இப்பயிலரங்கின் இறுதியில் இப்பயிலுநர்களிடமிருந்து பெறப்படும் மூன்று சிறந்த திரைப்படப் பிரதிகள் குறுந்திரைப்படங்களாகத் தயாரிக்கப்படவுள்ளன.

திரைப்பட உருவாக்கம் பற்றிய பயிற்சிகளைப் பிரித்தானியாவைச் சேர்ந்த கதரின் ஸ்ரட்மன், பிரித்தானிய திரைப்பட இயக்குநர் நோயல்லா சிமித் ஆகியோர் வழங்கிவருகின்றனர். 'ஸ்றிப்நெற்' நிறுவனத்தின் இலங்கைக்கான இணைப்பாளர் கா.ஞானதாஸ் இப்பயிலரங்கின் இணைப்பாளராகப் பணிபுரிகின்றார்.

# இடத்துக்கிடம் நடக்கும் சர்க்கஸ்; பேச்சுக்கள் குறித்து சந்திரிகா!

## தேர்தலும் இப்போதைக்கில்லை என்கிறார்

(கொழும்பு)

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெறுவது சமாதானப் பேச்



சுக்களல்ல. இடத்துக்கிடம் நடத்தப்படும் சர்க்கஸ் கண்காட்சியே இது என ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தைகள் சர்க்கஸ் போன்று இடத்துக்கிடம் மாறி நடக்கிறது. சர்க்கஸ் வண்டிகளைத் தள்ளிச் செல்வதுபோல பேச்சுக்களும் இடத்துக்கிடம் மாறிச்செல்கின்றது.

இந்தப் பேச்சுக்களில் ஒன்றுமே யில்லை. இந்தப் பேச்சுக்கள் தொடர்பாக மிகப்பெரிய சந்தேகம் ஏற்பட்டுள்ளது. 6 ஆயிரம் பேருடன் இருந்த புலிகள் தமது ஆளணியை 16 ஆயிரம் பேராக அதிகரித்துள்ளனர்.

இது அமைதிக்கானதா? இது பெருந் தாக்குதலுக்கான தயார் படுத்தலே என்றும் ஜனாதிபதி சந்திரிகா மேலும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிய தேர்தலை நடத்துமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்தாலும் தான் அவ்வாறு செய்ய மாட்டேன் எனவும் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் பேசுகையில்,

இந்த வருடம் பொதுத்தேர்தல் நடத்துவது என்ற பேச்சுக்கே இடமில்லை. ரணில் கோரினாலும் நாடாளுமன்றத்தைக் கலைக்கப் போவதில்லை. அடுத்த வருடம் வேண்டுமானால் தேர்தலை நடத்துவது குறித்துச் சிந்திக்கலாம்.

இப்போது நாடாளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தல் நடத்தினால் புலிகளின் ஆதரவுடன், மக்களின் ஆதரவைப் பெற்று ஆட்சியைப் பிடித்துவிடலாம் என்று ஐக்கிய தேசியக் கட்சி கருதுகிறது.

இதற்கு விட்டுக் கொடுக்கப் போவதில்லை. பொதுஜன ஐக்கிய முன்னணியைப் பலப்படுத்திய பின்னர்தான் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும் எனவும் அவர் சுதந்திரக் கட்சி மத்தியகுழு மாநாட்டில் மேலும் தெரிவித்தார். (க)

## நகைகள் அபகரிப்பு

மோட்டார் சைக்கிளில் தலைக் கவசம் அணிந்து கொண்டுவந்த இரண்டு இளைஞர்கள், புத்தூர் கிழக்கைச் சேர்ந்த ராசம்மா செல்லத்துரை என்பவருடைய நகைகளை அறுத்துச் சென்றுள்ளனர்.

திருமண வீட்டிலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த பெண்ணை - இடைமறித்த இளைஞர்கள், விலாசம் ஒன்றைக்காட்டிக் கதைத்துவிட்டு, கழுத்திலிருந்த 10 பவுண் நகைகளை அறுத்துச்சென்றனர். (78)

## இரு கிராம அலுவலர்கள் மீள் நியமனம்

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் இரண்டு ஓய்வுபெற்ற கிராம அலுவலர்களுக்கு மீள்நியமனம் வழங்கப்பட்டுள்ளது. கெருடாவில் கிராம அலுவலர் பிரிவுக்கு ஓய்வு பெற்ற கிராம அலுவலர் க.சண்முகநாதனும், பருத்தித்துறை கிழக்குக் கிராம அலுவலர் பிரிவுக்கு வி.சோதிநாயகமும் நியமிக்கப்பட்டுள்ளனர். (17)



ஜேர்மனியில் நேற்றுமுன்தினம் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளை புலிகள் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

# ஜப்பானில் பேச்சுக்கள் பற்றி ஆராய அகாஷி வருகின்றார்



(கொழும்பு)

இலங்கைக்கான ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷி எதிர்வரும் 12ம் திகதி கொழும்பு வரவுள்ளார்.

ஜப்பானில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான முன்னோடி நடவடிக்கைகளை மேற் கொள்வதற்காகவும்,

இலங்கையின் வட-கிழக்குப் பகுதிக்கான ஜப்பானின் உதவித் திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்காகவுமே யசுஷி அகாஷி இலங்கை வரு கின்றார்.

சில தினங்கள் அங்கு அவர் தங்கியிருந்து அரச மற்றும் சிறான் பிரதிநிதிகளுடன் மேற்படி விடயங்கள் தொடர்பாக ஆராயவிருப்பதாக ஜப்பானியத் தூதரகம் அறிவித்துள்ளது.

# ரணில் இம்மாத இறுதியில் இந்தியாவுக்குச் செல்வார்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இம்மாத இறுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

'இந்தியா டுடே' நடத்தவுள்ள கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொள்வதற்காகவே பிரதமர் ரணில் இந்தியாவுக்குச் செல்லவுள்ளார். பெப்ரவரி 28 ஆம் திகதி முதல் மார்ச் 2 ஆம் திகதி வரை இந்தக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

'நாளைய இந்தியா - 2003' என்ற இக்கருத்தரங்கில், இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் மற்றும் வெளிநாட்டு அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை, இந்திய விஜயத்தின்போது அரசு - புலிகள் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக முக்கிய தலைவர்களுடன் கலந்துரையாடல்களை நடத்துவர் எனவும் தெரியவருகின்றது. ரணிலின் இந்திய விஜயத்துக்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காகப் புதுடில்லியிலிருந்து இலங்கைத்தூதுவர் மங்கள முனசிங்க கொழும்புக்கு வந்துள்ளார்.

## சென்.மேரீஸ் அணிக்கு வெற்றி

யாழ்.பிரதேச செயலகங்களுக்குட்பட்ட கழகங்களுக்கிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டப் போட்டியில், நேற்றுமுன்தினம் துரையப்பா விளையாட்டரங்கில், கொய்யாத்தோட்டம் விளையாட்டுக் கழகதத்துக்கும் - நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக்கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டி வெற்றி, தோல்வி இன்றி முடிவடைந்தது. அதனால் சமநிலை தவிர்ப்பு அடிப்படையில் பனால்டி உதைமூலம் சென் மேரிஸ் அணி வெற்றிபெற்றது. (60)

# மோட்டார் சைக்கிள், ஓட்டோக்கள் பாவனை இலங்கையில் அதிகரிப்பு

இலங்கையில் மோட்டார் சைக்கிள்களின் பாவனை திடீரென அதிகரித்துள்ளதாக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் மட்டும் 50 ஆயிரம் மோட்டார் சைக்கிள்கள் புதிதாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இத்துடன் இலங்கையிலுள்ள - மோட்டார் வாகனத் திணைக்களத்தால் பதிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை 1 இலட்சத்து 40 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

இதேவேளை, ஓட்டோக்களும் இலங்கையில் அதிகரித்துள்ளது. கடந்த வருடம் 16 ஆயிரம் ஓட்டோக்கள் புதிதாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன, இவற்றுடன் சேர்த்து இலங்கையிலுள்ள ஓட்டோக்களில் மொத்த எண்ணிக்கை 1 லட்சத்து 50 ஆயிரமாக உயர்ந்துள்ளது.

# சமாதான முயற்சிகளுக்கு எதிராக கொழும்பில் பிக்குகள் பேரணி

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் வெளிநாட்டு மத்தியஸ்தத்தைக் கண்டித்தும், நோர்வேத் தூதுவரை வெளியேற்றக் கோரியும் பௌத்த பிக்குகள் கடந்த புதனன்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

தேசிய பிக்குகள் முன்னணியின் ஏற்பாட்டில் இப்பேரணி நடத்தப்பட்டது. நூற்றுக்கணக்கான பௌத்த பிக்குகள் கோட்டை போதிராம விகாரையில் ஒன்றுகூடி பேரணியை ஆரம்பித்தனர். வெளிவிவகார அமைச்சு வரை இப்பேரணி நடத்தப்பட்டது.

பிக்குகள் உயர்பாதுகாப்பு வலயப்பகுதிக்குள் செல்ல முற்பட்ட போது, பொலிஸாருடன் வாக்குவாதங்கள் ஏற்பட்டது. பிக்குகள் கடுமையான வார்த்தைகளால் பொலிஸாரைத் திட்டினர்.

பின்னர் வெளிவிவகார அமைச்சு அதிகாரியிடம், தேசிய பிக்குகள் முனணிச் செயலாளர் வண. கல்மங்கல சந்தானந்த தேரர் மகஜரைக் கையளித்தார்.

# கட்டடத் தேவைகளுக்கு கடலில் இருந்து மணல்

## நெதர்லாந்து உதவி கோரப்பட்டுள்ளது

நதிப்படுக்கைகளில் மணல் அகழப்படுவதைத் தடுத்து நிறுத்தி, கடலில் கட்டடத் தேவைகளுக்காக மணல் அள்ளுவதற்கு வெளிநாட்டு உதவியை இலங்கை கோரியுள்ளது.

நதிப்படுக்கைகளில் கட்டடத் தேவைகளுக்காக மணல் அள்ளப்படுவதால், சுற்றுச் சூழலுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டு வருகின்றது. வருடாந்தம் இலங்கையில் 7.5 மில்லியன் கியூபிக் மீற்றர் மணல் கட்டடத்தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

அடுத்த மூன்று வருடங்களில் மணற்தேவை 10 மில்லியன் கியூபிக் மீற்றர்களாக அதிகரிக்கும் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் சுற்றுச்சூழல் பாதிப்பைத் தவிர்ப்பதற்காகக் கடலில் இருந்து கட்டடத் தேவைகளுக்காக மணல் அகழ்வது குறித்து ஆய்வு செய்ய உதவும்படி நெதர்லாந்து அரசிடம் உதவிகோரப்பட்டுள்ளது.

• மொறட்டுவ பல்கலைக்கழகம் மணலுக்குப் பதிலாக மாற்று வளங்களைப் பயன்படுத்துவது குறித்து ஆராய்ந்து வருகின்றது. இந்தநிலையிலேயே, கடலில் இருந்து மண் அள்ளுவது குறித்து ஆராய்வதற்கு உதவுமாறு நெதர்லாந்திடம் கேட்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து உட்பட பல நாடுகளில் கடல்மணல் கட்டடத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# சிகிரியா மான் பண்ணையில் 14 மான்கள் மர்மமாக மரணம்

(மின்னேரியா)

சிகிரியாவிலுள்ள மான் பண்ணையில் 14 மான்கள் திடீரென இறந்துள்ளன. வனவிலங்குத் திணைக்களத்தினால் நடத்தப்பட்டு வந்த மான் பண்ணையில் பராமரிக்கப்பட்டுவந்த மான்களே மர்மமான முறையில் திடீரென இறந்துள்ளன.

இந்த மான்களை மின்னேரியா சரணாலயத்துக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோதே, மான்கள் இறந்துள்ளதாக வனவிலங்குத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

மான்களுக்கு விஷ ஊசி ஏற்றிக் கொல்லப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் சேவைபுரிந்து இளைப்பாறிய டாக்டர் சி.சிவயோககுருவின் சேவைநலன் பாராட்டுவிழா, வைத்தியசாலை அபிவிருத்திசபையால் நடாத்தப்பட்டபோது, அபிவிருத்திச்சபை செயலாளர் சி.சிவபாலசிங்கம் உரையாற்றுவதையும், அருகில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், பருத்தித்துறை பிரதேசசபை பிரதம நூலகர் என்.எஸ்.திருச்செல்வம், டாக்டர் சி.சிவயோககுரு ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# குடாநாட்டு நீதிமன்றங்களில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறை!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இயங்கும் நீதிமன்றங்களில் ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரியவருகிறது.

தற்போது ஊர்காவற்துறை, சாவகச்சேரி ஆகிய நீதிமன்றங்கள் சொந்த இடங்களில் இயங்கத் தொடங்கியுள்ளதால், நீதிமன்றங்களில் ஆளணிப் பற்றாக்குறை தீவிரமடைந்திருக்கின்றது.

கடந்தகாலங்களில் ஆளணிப் பற்றாக்குறை நிலவியபோதும், ஊர்காவற்துறை நீதிமன்றம் - யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் இயங்கியதாலும், சாவகச்சேரி நீதிமன்றம் - பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் இயங்கியதனாலும், இந்த ஆளணிப் பற்றாக குறையை ஓரளவு சமாளித்துக் கொள்ளமுடிந்தது.

எனினும், தற்போது அனைத்து நீதிமன்றங்களும் சொந்த இடங்களில் இயங்கத் தொடங்கியுள்ளதால், ஆளணிப் பற்றாக்குறை பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (லி)

## நிறுவன நிகழ்வும், சான்றிதழ் வழங்கும் வைபவமும

ஐ.ஐ.எஸ். நிறுவன 7 ஆவது ஆண்டு நிறுவன தினமும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று காலை 9 மணிமுதல் சென். ஜோன்ஸ் கல்லூரி ஜூபிலி மண்டபத்தில் நிறுவன இயக்குநர் கு.விக்னேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(நவிண்டில்)

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி இன்று பி.ப. 2 மணிக்கு விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (116)

## யாழ். பிரதேச செயலர் பிரிவில் இரு சமுர்த்தி வங்கிகள்

யாழ்.பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில், இரண்டு சமுர்த்தி வங்கிகள் புதிதாகத் திறக்கப்படவுள்ளன.

யாழ்.நகர் மேற்கு சமுர்த்தி வலயத்திற்கான சமுர்த்தி வங்கி - புங்கங்குள வீதியிலும், யாழ்நகர் தெற்கு சமுர்த்தி வலயத்திற்கான சமுர்த்தி வங்கி மானிப்பாய் வீதியிலும் திறந்து வைக்கப்படவுள்ளன.

## வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஆறாவது அகவையில்

HAPPY BIRTHDAY



பெயர் :றிச்சேட் றொகான்

முகவரி : ஜேர்மனி



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------------

முகவரி:------------------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------------

பெற்றார் ஒப்பம்

# நீரிழிவு நோய் DIABETES

பகுதி 13

- ச.ஆ.கோபாலமூர்த்தி.

*உதாரணம்:-*

1) 2 இடியப்பம், 2 தோசை, 2 பிட்டு, 2 அப்பம் சாப்பிடலாம் என வைத்தியர் கூறினால்- 2 தோசைகளையும், 2 இடியப்பங்களையும், 2 பிட்டுகளையும், 2 அப்பங்களையும் சேர்த்து ஒரே வேளையில் உண்டு விடுகிறார்கள்.

*உதாரணம்:-*

2) 2 துண்டு பாண் சாப்பிடலாம் என வைத்தியர் கூறினால், ஒரு பாணை இரண்டு துண்டுகளாக வெட்டி இரண்டு துண்டுகளையும் சாப்பிட்டு விடுகிறார்கள்.

*உதாரணம்:-*

3) 2 குழல் பிட்டுகள் சாப்பிடலாம் என வைத்தியர் கூறினால், ஒரு பிட்டுக்குழலை நிரப்பி அவிக்கப்பட்ட 2 பிட்டுக்களை (2 பிட்டுக்குழல் நீளமான) பிட்டுக்களைச் சாப்பிட்டு விடுகிறார்கள்.

இத்தவறுகள் தவிர்க்கப்படவேண்டும். வைத்தியரிடம் உணவின் அளவு பற்றித் தெளிவான விளக்கம் பெறவேண்டும்.

(15) வாகனம் ஒன்றைச் செலுத்தும்போது அந்த வாகனம் பாதையிலிருந்து விலகி, இடது பக்கத்திற்குச் சென்றாலும் விபத்து ஏற்படும். வலது பக்கம் சென்றாலும் விபத்து ஏற்படும். இதேபோல, நீரிழிவு நோயாளியின் இரத்தத்தில் குளுக்கோஸ் குறைவதும் பாதிப்பை ஏற்படுத்தும், மிகுவதும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, எப்பொழுதும் சரியான அளவில் இரத்தத்தில் குளுக்கோஸ் இருப்பதைப் பரிசோதித்து உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

(16) அடிக்கடி சலத்தில் கீற்றோனும், அல்புமினும் இருக்கிறதா என்பதையும் பரிசோதனை செய்துகொள்ளவேண்டும்.

(17) இன்சுலின் அளவு, வாய்வழிவில்லைகளின் அளவு, குளுக்கோஸ் குறைநிலை **(HYPOGLYCEMIA)** என்பனவற்றைப் பற்றித் தெளிவான அறிவு பெற்றிருக்கவேண்டும். இதைப்பற்றிக் குடும்பத்தினரிடமும், நண்பர்களிடமும் கூறிவைக்கவும் வேண்டும்.

(18) நகங்களை வெட்டும்போது விரல்களில் காயம் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும். கால்களிலும், பாதங்களிலும் இரத்தோட்டம் சீராக இருக்கிறதா? நரம்புகள் பாதிக்கப்பட்டுள்ளனவா? கறுப்புநிறம் எங்காவது தோன்றுகிறதா? எனப் பரிசோதிக்க வேண்டும். வசதியானவர்கள் ஆண்டுதோறும் கால்நோய் நிபுணரிடம் **(CHIROPODIST)** ஆலோசனை பெறலாம்.

(19) முழுவாடைப் பாலுக்குப் பதிலாக ஆடை நீக்கிய பாலையும், தயிருக்குப் பதிலாக மோரையும் உபயோகித்தல் நன்று.

(20) ஆண்டுக்கு ஒரு தடவை கண்களைப் பரிசோதிப்பதுடன், ஒரு தடவை பூரண வைத்திய பரிசோதனை செய்வித்தல் நன்று.

(21) இன்சுலின் குறைவாகச் சுரக்கும் நீரிழிவு நோயாளிகள், மூன்று வேளை உண்ணும் உணவை 6 தடவைகளில் பிரித்து உண்ணல் வேண்டும்.

(22) எல்லாவேளை உணவிலும் நார்ப்பொருள்களையும் சேர்த்து உண்ணவேண்டும். (சிலர், நார்ப்பொருளுக்காகத் அரிசித் தவிட்டை - ஆடை நீக்கிய பாலில் கரைத்துக் குடித்தும், ஆரோக்கியமாக வாழ்கிறார்கள்).

*(தொடரும்)*

# நமது ஈழநாடு வழங்கும்




## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

# பரிசுப் போட்டி

MEGA

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: **என்.எஸ்.இரத்தினம்**

[இரத்தினகோபால்ஸின் இணைந்த நிறுவனம்]

6, முதலாம் குறுக்குத்தெரு, வவுனியா.

ஃகீறோ ஃகொண்டா மோட்டார் சைக்கிள்களின் வவுனியா விற்பனை முகவர்.

இரண்டாம் பரிசு - 15,000

மூன்றாம் பரிசு - 10,000

வழங்குவோர்: **சந்தியா மல்ரிகோட்யாட்**

531, பருத்தித்துறை வீதி, நல்லூர்,

பிரதான வீதி, பண்டத்தரிப்பு

Fancy goods, gift items, fevicryl & acron paint items.



இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்!

வினாக்கொத்துக்கு விடை தந்து பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்!!



## உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

### வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (....................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (....................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெறப்போகின்றன? (....................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (....................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (....................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'

நமது ஈழநாடு,

267, நாவலர் வீதி,

யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ------------------------------------------

வயது: ------------------------------------------

முகவரி: ------------------------------------------

------------------------------------------



*சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்ட சாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.*

*போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.*

# வார்த்தை விளையாட்டு - 19

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கி | 2 | 3 | | | |
| | | | | 4 க | |
| | | 5 கா | | | |
| | 6 அ | | | 7 | 8 |
| 9 | | ம் | | | ஆ |
| | 10 | | | | |

முழுப் பெயர் : ..............................

கற்கும் பாடசாலை : ..............................

கற்கும் தரம் : ..............................

முகவரி : ..............................

.............................. ..............................

கையொப்பம் திகதி

இடமிருந்து வலம்
1.கோள்
4.பாட்டு எழுதுபவரை இப்படி விளிக்கலாம்
5.ஆலயங்களில் நேர்த்திக்கு எடுப்பது
6.இரும்பு ஆயுதங்களை கூராக்க பயன்படுவது
7.இதனால் தான் உடல் உருவம் பெறுகிறது (எலும்புக் கூட்டுக்கு மேல் போர்த்தப்பட்டிருக்கிறது.)
9.ஒரு இசைக்கருவி (களி மண்ணால் உருவானது.)
10.கண்ணாடியில் தோன்றும் உருவம்

மேலிருந்து கீழ்
1.ஒரு நீர் நிலை
2.வாகனம்
3.நேரம் காட்டும் கருவி
4.மடல்
6.காடு
8.விருப்பம் (தலைகீழாக)

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக் குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேற்காணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில,

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 12-02-2003
சரியான விடை எழுதிய மூவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

## வார்த்தை விளையாட்டு - 18

இல் சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1ஆம் பரிசு -*
தர்ஷிகா தர்மரட்ணம்,
53/1, சீனியர் லேன்,
அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

*2ஆம் பரிசு -*
ந.துவாரகன்,
திருநகர், கிளிநொச்சி.


*3ஆம் பரிசு -*
சி.சத்தியேந்திரா,
10/2, நடுத்தெரு லேன், அரியாலை,
யாழ்ப்பாணம்.

★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*

# பழமொழிகள்

1. வாய் உள்ள பிள்ளை பிழைக்கும்.
2. மனமுண்டானால் இடமுண்டு.
3. திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை.
4. குப்பையில் கிடந்தாலும் குன்றுமணி மங்காது.
5. எய்தவன் இருக்க அம்பை நோவான் ஏன்?
6. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
7. இறைத்த கிணறு ஊறும்.
8. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
9. ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி.

*கு.சத்தியதர்சன்*
*தரம் - 8*
*யா/ஹாட்லிக் கல்லூரி*



# சிறுவர் அரங்கம்

அது ஒரு பெரிய மாமரம். அதிலே பூக்கள் இருந்தன. பிஞ்சுகள் இருந்தன. காய்கள் இருந்தன. இலைகள் ஏராளம் இருந்தன. அது ஓர் அழகான மரம். காற்றுக்கு அதன் இலைகள் தலையை அசைத்தன.

அதன் கிளைகள் நீண்டு இருந்தன. அவற்றில் பல காகங்கள் கூடுகட்டி இருந்தன. அதன் கிளையில் ஒரு பொந்து இருந்தது. அதில் இரண்டு கிளிகள் இருந்தன. இன்னொரு கிளையில் ஒரு குரங்கு இருந்தது.

மரத்தின் கீழே நல்ல நிழல் காணப்பட்டது. களைத்து வந்த மாடுகள் அங்கே படுத்திருந்தன. களைத்த மனிதரும் அதன் கீழ் ஆறினர். ஓய்வெடுத்தனர்.



## மரத்தை வெட்டலாமா?

ஒரு விறகுவெட்டி வந்தான். மரத்தைச் சுற்றிப் பார்த்தான். தனது கோடரியை எடுத்தான். மரத்தை வெட்டுவதற்கு ஓங்கினான். "வெட்ட வேண்டாம்" என்று காகம் கத்தியது. "மரத்தை வெட்டினால் நர்ன் எங்கே கூடு கட்டுவேன்" என்று காகம் அழுதது.

"வெட்ட வேண்டாம்" என்று குரங்கு மன்றாடியது. மரத்தின் கீழே மாடுகள் படுத்திருந்தன. "மரத்தை வெட்டினால் நிழல் போய்விடும்" என்று ஒரு மாடு சொன்னது.

விறகுவெட்டி ஒன்றையும் கேட்கவில்லை. ஓங்கி வெட்டினான். மாடு ஓடி வந்தது. தனது கொம்பினால் அவனை இடித்தது. குரங்கு பாய்ந்து வந்தது. அவனது கோடரியைப் பறித்துக்கொண்டு ஓடியது. காகம் பறந்து வந்தது. அவனது தலையிலே கொத்தியது. கிளி பறந்து வந்தது. அவனது முதுகிலே கொத்தியது. "அப்பாடா நான் மரத்தை வெட்டவில்லை" என்று விறகுவெட்டி ஓடினான்.

- கலாநிதி சபா. ஜெயராசா.

*வார்த்தை விளையாட்டு – 18*

## சரியான விடைகள்

இடமிருந்து வலம்
1. பத்திரிகை
3. கைதி
4. அங்கம்
6. மகரம்
8. கபடி
10. அவல்
11. பேரின்பம்

மேலிருந்து கீழ்
1. பண்டம்
2. திங்கள்
5. கரடி
7. கள்வன்
9. கல்வி
10. அரி

# எமது பாடசாலை

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட அழகிய தீவாம் காரைநகர். அந்தக் காரைநகரின் நுழைவாயிலுக்கு அண்மையில் அமைந்துள்ளது, எமது பாடசாலையான யா/கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயம். இப்பாடசாலையின் அதிபரின் பெயர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை. எமது பாடசாலையில் முதலாம் வகுப்பு - பதின்மூன்றாம் வகுப்புவரை உள்ளது. எமது பாடசாலையில் உயர்தர வகுப்பில் கணிதம், விஞ்ஞானம், கலை, வர்த்தக வகுப்புகளில் தலா பத்திற்கும் அதிகமான மாணவர்கள் கல்வி




கற்று வருகின்றார்கள். திறமைமிக்க ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றார்கள். எமது பாடசாலை மாணவர்கள் வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், துடுப்பாட்டம், உதைப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்களில் பங்குபற்றி வலயமட்டம், கோட்டமட்டம், தேசியமட்டங்களில் பரிசில்களைப் பெறுகின்றனர். இதைவிடத் தமிழ்த் தினப்போட்டி, ஆங்கிலப்போட்டி, கட்டுரைப்போட்டி, உடற்பயிற்சி ஆகிய போட்டிகளில் வலயமட்ட, கோட்ட மட்டத்திலும் பல பரிசில்களைப் பெறுகின்றனர். எமது பாடசாலை கனிஷ்ட மன்றம், இடைநிலை மன்றம், உயர்தர மன்றம் ஆகிய மன்றங்களும் - தமிழ் மன்றம், கணித, விஞ்ஞான மன்றம், ஆங்கில மன்றம் என்பன எமது பாடசாலையில் இயங்குகின்ற மன்றங்கள் ஆகும்.

ஆக்கம்:- **தருமலிங்கம் - முரளிராசன்**
யா/கலாநிதி ஆ.தி.ம.ம. வி.காரைநகர்.

# உங்கள் கைவண்ணம்



த.சீமாறன்,
தரம் - 8
யா/ சென் ஜோன்ஸ் கல்லூரி,



சி.சிவநேசன்
தரம் -10
யா/ஹாட்லி கல்லூரி, பருத்தித்துறை


# இளந்தேனீக்கள் கழகம்
## அங்கத்தவர்கள்



முழுப்பெயர்:-
ச.வித்தியாகர்
கற்கும் பாடசாலை :-
வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், முத்திரை சேகரித்தல், விளையாட்டு.



முழுப்பெயர்:-
பா.சதீசன்
கற்கும் பாடசாலை :-
யா/ வரணி சைவப்பிரகாச வித்தியாலயம்
கற்கும் தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
முத்திரைசேகரித்தல், வானொலி கேட்டல், பத்திரிகைத்துறை.



முழுப்பெயர்:-
அ. பிறேம் அன்ரனீஸ்
கற்கும் பாடசாலை :-
யா/ நெடுந்தீவு மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டுத்துறை, கல்வித் துறை, வானொலி கேட்டல்.



முழுப்பெயர்:-
மு.மிதுலன்
கற்கும் பாடசாலை :-
யா/ இந்து ஆரம்பப்பாடசாலை
கற்கும் தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.

முழுப்பெயர்:-
சிவகௌரி மகேந்திரன்,
கற்கும் பாடசாலை :-
யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை.
கற்கும் தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
ரீ.வி.பார்த்தல், வானொலி கேட்டல், புத்தகம் வாசித்தல்.

முழுப்பெயர்:-
க.பிரியலக்ஷன்
கற்கும் பாடசாலை :-
யா/சேர் வைத்திலிங்கம் மத்திய மகா வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை, சங்கீதத்துறை, வானொலி, விளையாட்டு.

முழுப்பெயர்:-
மரியநாயகம் கார்த்திகா
கற்கும் பாடசாலை :-
யா/இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயம்
கற்கும் தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :-
ரீ.வி.பார்த்தல், நடனம், பாட்டு, கதைப்புத்தகம் வாசித்தல், நாடகம்.


முழுப்பெயர்:-
வர்ச்சிகா யோகராசா
கற்கும் பாடசாலை :-
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி
கற்கும் தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :-
கதைப்புத்தகம் வாசித்தல், சித்திரம் வரைதல், புதிர்.

# நோர்வே

இலங்கையின் சமாதான முயற்சிகளில் அனுசரணையாளராகத் தொழிற்படும் நோர்வே நாடு குறித்து இந்தவாரம் பார்க்கலாம்.

| | | |
|---|---|---|
| தலைநகர் | - | ஒஸ்லோ |
| பரப்பளவு | - | 3 லட்சத்து 23 ஆயிரத்து 895ச.கி.மீ |
| மொழி | - | நோர்வேஜியன் |
| எழுத்தறிவு | - | 100% |
| சமயம் | - | கிறிஸ்தவம் |
| நாணயம் | - | குறோனர் |

நோர்வே ஐரோப்பாவின் வடபகுதியில் உள்ள ஒரு ஸ்கன்டிநேவிய நாடு. இது நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறது. ஏனெனில், நோர்வேயில் மே மாத நடுப்பகுதியில் இருந்து ஜுலை மாத இறுதிவரை சூரியன் மறைவதில்லை.



அது போன்றே நவம்பர் மாத இறுதியிலிருந்து ஜனவரி மாத இறுதிப் பகுதிவரை அடிவானில் சூரியன் தோன்றுவதும் இல்லை.

நோர்வேயின் 70 சதவீதமான பகுதி, மனிதர்கள் வாழமுடியாத வகை யில் பனி மலைகள், பனி ஆறுகள் மற்றும் ஆறுகள் நிறைந்தவை.

பார்லி, ஓட்ஸ், உருளைக்கிழங்கு போன்றவைதான் இங்கு பயிரிடக்கூடிய தாவரங்கள். வேறெந்த விவசாய உற்பத்தியும் செய்யமுடியாது. அவ்வளவு குளிரும் பனியும்.

மீன் பிடித்தல்தான் நோர்வேயின் பிரதானமான தொழில். இங்குள்ள ஊசியிலைக் காடுகளிலிருந்து பெறப்படும் மரங்கள் வேறு பல தொழில்களுக்கு மூலப் பொருட்களை அளிக்கின்றன. சுரங்கத்தொழில் முக்கியமானது.

உணவுப்பொருள் உற்பத்தி, இயந்திரங்கள், உலோகத் தொழில்கள், வெட்டுமரங்கள், காகிதம், காகிதக்கூழ், அலுமினியம், மின்ரசாயனப் பொருட்கள் என்பன நோர்வேயில் உற்பத்தியாகும் முக்கியமான பொருட்களாகும்.

நோர்வே நாட்டிலும் இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்த ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் வசிக்கின்றார்கள். உங்கள் உறவினர் அல்லது அயலவர்களின் உறவினர் யாராவது நோர்வேயில் இருக்கலாம். அவர்களிடம் நோர்வே பற்றி மேலும் அறிந்துகொள்ள முயற்சி செய்துபாருங்கள்.

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
**267,நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :....................................
கற்கும் பாடசாலை :....................................
கற்கும் தரம் :....................................
வீட்டு முகவரி :....................................
பிறந்த திகதி :....................................
ஆர்வமுள்ள துறைகள் :....................................
:....................................

................ ............................
திகதி ஒப்பம்

............................ ............................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

# நவீன நியூட்டன்



ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## பாராட்டத்தக்க சேவை!

போர் ஓய்ந்த மண்ணில் - யுத்தத்தின் தொடர்ச்சியாக மக்களைப் பெரிதும் அச்சுறுத்திக் கொண்டிருப்பவை - பரவலாகப் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளும், மிதிவெடிகளும் ஆகும்.

யுத்தக் களங்களாக இருந்த பகுதிகள் பலவற்றிலும் மக்கள் மீளக்குடியமர்ந்துவரும் நிலையில் - மிதிவெடிகளால் அவர்களுக்கான அச்சுறுத்தல் அதிகரித்தே வருகின்றது.

தனியே இராணுவ முன்னரங்க நிலைகளை அண்டிய பகுதிகளில் மட்டுமல்லாது, எழுந்தமானமாகப் பல பகுதிகளிலும் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பது ஆபத்தை இன்னமும் அதிகமாக்கியுள்ளது.

இவ்வாறு புதைக்கப்பட்ட மிதிவெடிகள் பற்றிய வரைபடங்களையோ, தகவல்களையோ தருவதில் இராணுவத்தரப்பு பின்னடித்து வருவதால் - அவற்றைச் செயலிழக்கச் செய்வதற்கான வாய்ப்புக்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழலில் - சர்வதேச ரீதியிலான கண்ணிவெடிகள் அகற்றும் நிபுணர்கள் தொடங்கிய மிதிவெடிகள் அகற்றும் நடவடிக்கைகள், எதிர்பார்த்தளவு வெற்றியைத் தரவில்லை என்றே அறியப்படுகின்றது.

பரந்த பிரதேசங்களில் ஏகத்துக்கும் விதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றுவதில் - இந்நிபுணர்கள் கடைப்பிடிக்கும் வழிமுறைகளும், செயற்பாடுகளும் - மிதிவெடிகள் அகற்றுவதை துரிதப்படுத்துவதற்கு பெருமளவில் துணையாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் - வன்னியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கீழ் இயங்கிவரும் மனிதநேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவின் தொழிற்பாடும் திறமையும் - மிகக் குறிப்பிடத்தக்க சாதனையாகத் திகழ்ந்துவருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

தகுந்த உபகரணங்களோ, தொழிற்தகைமையோ இல்லாதபோதும் - அண்மைக்காலத்தில் - மனிதநேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவினர் - செயலிழக்கவைத்த மிதிவெடிகளும், கண்ணிவெடிகளும், அவர்களால் சுத்திகரிக்கப்பட்ட நிலப்பிரதேசத்தின் அளவும் வியப்பைத் தருவனவாகும்.

வெளிநாடுகளிலிருந்து வந்த கண்ணிவெடியகற்றும் நிபுணர்கள் - ஆச்சரியப்படும் அளவுக்கு இவர்களின் பணி இருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

மிகுந்த அர்ப்பணிப்புடனும், சேவையுணர்வுடனும் - தமக்கான ஆபத்துக்களைப் பொருட்படுத்தாது மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரின் பணி - தமிழ்மக்களால் மனமுவந்து பாராட்டப்பட வேண்டிய சேவையென்பதில் சந்தேகமில்லை.

இதுவரைகாலமும் வன்னிப் பகுதியில் மட்டுமே தமது சேவையை வழங்கி வந்த இப்பரிவு - அண்மையில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்துடன் செய்து கொண்ட உடன்பாட்டுக்கமைய, யாழ். குடாநாட்டிலும் தனது சேவையை விரிவாக்கம் செய்யவுள்ளது.

கடந்த ஓரிரு தினங்களுக்கு முன்னர்கூட சாவகச்சேரி - கெருடாவில் பகுதிகளில், மீளக்குடியேறுவதற்காக வீட்டைத் துப்புரவு செய்துகொண்டிருந்த இளைஞரொருவர், நிலத்தை மண்வெட்டியால் கொத்தியபோது மர்மப்பொருளொன்று வெடித்ததில் படுகாயமடைந்தார்.

இதுபோன்ற ஏராளமான சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்று வரும்போது - இயல்புவாழ்க்கைக்கு அச்சுறுத்தலான காரணிகளாக அவை அமைந்து வரும் நிலையில் - யாழ்.குடாநாட்டில் தீவிரமான செயற்பாட்டிலமைந்த மிதிவெடிகளகற்றும் பணி அவசியமாகியுள்ளபோது - மனிநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரின் பணி இங்கும் மகத்தானதாகவே அமையுமென எதிர்பார்க்கலாம்.

இந்தநிலையில் - இதுவரை காலமும் தமக்கான பணிகளைத் தாமே வடிவமைத்து வந்த இப்பிரிவினரில் ஒரு பகுதியினர், சர்வதேச தரத்திலான மிதிவெடி அகற்றும் பயிற்சியைப் பூர்த்தி செய்திருக்கின்றனர்.

இவ்வாறு - 80 பேர் தமது பயிற்சிகளைப் பூர்த்தி செய்து வெளியேறும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

திறமையாக இயங்கிவரும் மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினருக்கு - தகுந்த தொழிற்தகைமையை வழங்குவதாக இந்தப் பயிற்சிகள் அமைந்திருக்கின்றன.

எனவே, மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரின் திறனாற்றல் இன்னமும் பெருகிவரும் என நம்பலாம்.

இந்தவகையில் - உள்ளூர் அமைப்பொன்று சர்வதேச தரத்தில் வளர்ந்து வருவது நமக்கெல்லாம் பெருமை தரக்கூடியதொன்றேயாகும்.

# இந்தியத் தூதுவரை நீக்குமாறு தமிழ்க் காங்கிரஸ் கோரவில்லை

(கொழுப்பு)

இந்தியத் தூதுவர் பதவியில் இருந்து நிருபம் சென்னை நீக்க வேண்டும் எனத் தமிழ்க்காங்கிரஸ் எந்தக் கோரிக்கையையும் விடுக்கவில்லை என,

கட்சியின் பொதுச்செயலாளர் தி.மகேந்திரராசா அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அவரது அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

குழப்பத்தை ஏற்படுத்த முனையும் இந்தியத் தூதுவரை நீக்குங்கள் என்ற செய்தி மகுடமிட்டு 24.01.2003 வெளிவந்த பத்திரிகைச் செய்தியை 02.02.2003 கூடிய, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் செயற்குழு கூடிஆராய்ந்தது.

இந்தியத் தூதுவர் பதவியில் இருந்து நிருபம் சென் அவர்களை நீக்கவேண்டும் என தமிழ்க்காங்கிரஸ் எந்தவொரு கோரிக்கையையும் விடுக்கவில்லை. "தமிழ்க் காஙகிரஸின் துணைத்தலைவர் தில்லைக் கூத்தன் நடராஜா கடும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்" என்பதாகத் தங்கள் பததிரிகைச் செய்தி கூறுகின்றது.

கட்சியின் எந்தவவொரு பதவி நிலையிலும் இல்லாத ஒருவர், கட்சியின் பெயரால் கோரிக்கை விட்டதைத் தமிழக் காங்கிரஸ் செயற்குழு கண்டிக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆரோக்கியமான கருத்துக்களை யார் சொன்னாலும் ஏற்கவேண்டும்

## தமிழ்க் காங்கிரஸ் செயலாளர் அறிக்கைக்கு குமரகுருபரன் பதில்

வட - கிழக்குப் பௌத்த ஆலயங்களை இந்தியா புனரமைப்புச் செய்வதை தமிழ்க் காங்கிரஸ் ஏற்றுக்கொள்கிறதா? எனக் கேள்வி எழுப்பியுள்ளார் அக்கட்சியின் சிரேஷ்ட துணைத்தலைவரான ந.குமரகுருபரன்.

வட- கிழக்கிலுள்ள பௌத்த ஆலயங்களின் புனரமைப்புக்கு உதவிசெய்ய உறுதியளித்தமைக்காகவே இந்தியத் தூதுவரைப் பதவி நீக்குமாறு தில்லைக்கூத்தன் நடராஜா கோரிக்கை விடுத்திருந்தார்.

இவர் கட்சியில் பொறுப்பில் இருக்கின்றாரா? இல்லையா? என்பதல்ல முக்கியம். ஆரோக்கியமான கருத்துக்களே எமக்குத் தேவை. மேற்படி செய்தி வெளியானபோது தில்லைக்கூத்தன் நடராஜா கட்சியின் துணைத்தலைவராகவே பதவி வகித்திருந்தார்.

இவரைக் கடந்த 2 ஆம் திகதி கூடிய கட்சியின் செயற்குழு, அப்பதவியில் இருந்து நீக்கியுள்ளது. இது கட்சி உறுப்பினர்களுக்குத் தெரியாது. இவ்வாறு நடைபெறுவது கட்சிக்கு ஆரோக்கியமானதல்ல.

நிருபம் சென்னைப் பதவி நீக்குங்கள் என்ற தில்லைக் கூத்தனின் கோரிக்கையுடன், தமிழ்க்காங்கிரஸ் உடன்படவில்லையா என்றும் குமரகுருபரன் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார்.

# பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை பெயர்கள் பதிவு செய்யலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை செய்யவிரும்புவோர் தமது பெயர்களைப் பதிவு செய்யும்படி வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

எதிர்வரும் 17 ஆம் தொடக்கம் 25 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ள பிரிட்டனிலிருந்து சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் சாள்ஸ் விவேகானந்தன் தலைமையிலான குழுவொன்று ஜேர்மன் 'ஹெல்த் பவுண்டேஷன்' ஏற்பாட்டில் யாழ். வரவுள்ளது.

சத்திரசிகிச்சைகளைச் செய்ய விரும்புவோர் எதிர்வரும் 11 ஆம் திகதிமுதல் 14 ஆம் திகதிவரை தமது பெயர்களை வெளிநோயாளர் பகுதி சத்திரசிகிச்சைக் கூடத்தில் பெயர்களைப் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# போலி ஆவணங்கள் அச்சிடும் இரு நிலையங்கள் முற்றுகை

(கொழும்பு)

போலி ஆவணங்கள், நோட்டுக்கள் என்பனவற்றை அச்சிடும் இரண்டு நிலையங்கள் கொழும்பு பொரளை, வோட் பிளேசில் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டன.

இந்தச் சுற்றி வளைப்பின்போது - போலி நோட்டுக்கள், பல்கலைக்கழக போலிச்சான்றிதழ்கள் மற்றும் அரச, தனியார் வங்கிகளின் போலிக்கடிதத் தலைப்புக்கள் உட்பட பல்வேறு போலி ஆவணங்களும், இரண்டு கணினிகளும் கைப்பற்றப் பட்டதாகப் பொரளை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

அத்துடன், இரண்டு - சந்தேக நபர்கள் கைதுசெய்யப் பட்டதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் இன்ஸ்பெக்டர் சில்மன் தெரிவித்துள்ளார்.

# புன்னாலைக் கட்டுவன் - கப்பம்புலத்தில் மிதிவெடிகளால் மக்கள் அச்சம்!

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, கப்பம்புலம் பகுதியில் பெரும்பாலான பிரதேசங்களில் மிதிவெடிகள் அகற்றப்படாமல் இருப்பதாக அப்பகுதியில் மீளக்குடியேறிவரும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் இப்பகுதியில் நிலைகொண்டிருந்த படையினர் - மிதிவெடிகளைப் புதைத்துள்ளனர். படையினர் வெளியேறியபோதும் மிதிவெடிகள் முழுமையாக அகற்றப்படவில்லை. இதனால், இப்பகுதியில் மீளக்குடியேறிய மக்கள் அச்சத்துடனே வாழவேண்டியுள்ளது.

அத்துடன், தமது விவசாய நிலங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளமுடியாமல் பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். மேற்படி பகுதியில் வசிக்கும் மக்கள் பாவிக்கும் வீதியிலும் மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளமையினால், அம்மக்கள் வேறு பாதைகளால் பயணங்களை மேற்கொண்டுவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (96)

# மின் இணைப்பு வேலைகள் முடிந்தும் மின் விநியோகம் ஆரம்பிக்கவில்லை

## வடமராட்சி வடக்குப் பகுதி மக்கள் விசனம்

வடமராட்சி வடக்கு கரையோரப் பகுதிக்கு இருபத்துநான்கு மணிநேர மின்விநியோகம் செய்வதற்கான மின் இணைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு, இரு மாதங்களாகியும் இன்னமும் மின்சார விநியோகம் வழங்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பருத்தித்துறை, சுப்பர்மடம் முதல் தொண்டமானாறு வரையான கரையோரப் பகுதிகளுக்கும் அதனை அண்டிய கிராமங்களுக்கும் மின் இணைப்பு வழங்கும் வேலைகள் பூர்த்தியடைந்தபோதிலும், மின்சாரம் வழங்கப்படவில்லை. இந்தப் பகுதிக்கு - சுப்பர்மடம், பொலிகண்டி, தொண்டமானாறு பகுதிகளில் ஜெனரேற்றர்கள் பொருத்தப்பட்டு மின்சார விநியோகம்- ஒன்றுவிட்டு ஒரு தினம் வழங்கப்பட்டு வருகின்றது. எனினும், மின்சாரம் சீரற்றநிலையிலே விநியோகிக்கப்பட்டுவருவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (17)




அக்கராயன் குளத்திற்கு நீர் கொண்டு செல்லும் கால்வாய்களில் மணல் வெட்டி அகழப்படுவதால், அக்கராயன் குளத்திற்குள் மணல் சென்று சேர்வதாகத் தெரியவருகின்றது.

கால்வாய்களில் மணல் ஏற்றப்படுவதால், நீரோட்டத்திற்கான நிலத்தின் சாய்வுநிலை பாதிப்படைந்துள்ளது. இதனால் வேகமாகச் செல்லும் நீரோட்டத்தினால் பெருமளவு மண் குளத்தினுள் அடித்துச்செல்லப்படுகின்றது.

அத்துடன், மண் அகழ்வோர் வாய்க்காலில் மட்டுமன்றி, அதன் ஓரங்களிலும் மண்ணையும் வெட்டி அகழ்ந்து வருகின்றனர். இதனாலும் மண்ணரிப்பு ஏற்பட்டு வருகின்றது. இதனால் கால்வா[illegible] ஓரங்களில் உள்ள பெருமளவு மரங்கள் அழியும் ஆபத்து ஏற்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# கொலம்பிய விண்கலம் வெடித்துச் சிதறியமை அமெரிக்க வல்லரசிற்கு ஒரு பின்னடைவாகும்

அமெரிக்க மக்களுக்கு மீண்டுமொரு துயரம் 'கொலம்பியா' வெடித்



கொலம்பியாவுக்குள் விண்வெளி வீரர்கள்

துச் சிதறியதால் ஏற்பட்டது. இதே போன்றே 1986 இல் 'சலஞ்சர்' விண்கலம் ஏழு பேருடன் வெடித்துச் சிதறியது. இது புறப்பட்ட சிறிது நேரத்தில் வெடித்துச் சிதறியது. ஆனால், கொலம்பியா ஆய்வைப் பூர்த்திசெய்து தரையிறங்க சில நிமிடம் இருக்கையில் வெடித்துச் சிதறியது. இத்துயரத்தில் இஸ்ரேலியர்களும், இந்தியர்களும் பங்கெடுத்துக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது. காரணம், இலான் ரமோன், கல்பனா சவ்லா என்ற இரண்டு



உறவுகளை இழந்த சோகத்தில்....

வீரர்களும் முறையே, மேற்குறிப்பிட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

இவ்வாரம் விண்வெளி நோக்கிய அரசியலைப் பரிசீலிப்போம்.

விண்வெளி நோக்கிய தொழில்நுட்பத்திற்கான தேவையும், அவசியமும் 1944 களில் உணரப்பட்டிருந்தது. இதற்கான ஆரம்ப தயார்ப்படுத்தல் பிரித்தானிய, ஜேர்மனிய அறிஞர்களால் முன்வைக்கப்பட்டிருந்தது. அது படிப்படியாக விரிவடைந்து, இரண்டாம் உலக யுத்தசூழல், அதற்கான தொழில்நுட்பத்தினை மேலும் அதிகரித்திருந்தது. காரணம், இரண்டாம் உலக யுத்தத்திலே ஏவு ஆயுதங்கள் ஜேர்மனியிலிருந்து ஏனைய ஐரோப்பிய நாடுகள் மீது ஏவப்பட்டன. இந்த எறிகணைகளின் விருத்தியாகவே - கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள் பிந்திய காலத்தில் வடிவமைக்கப்பட்டன. அவ்வாறே மனிதன தனது தொழில்நுட்ப வலுவைக் கொண்டு அண்டவெளியைப் பரிசோதிக்க ஆரம்பித்தான். பிறகோள்களை நோக்கிப் படையெடுக்க ஒவ்வொரு நாடுகளும் தயாராகின. மனிதனின் மிக வேகமான வளர்ச்சியை - விண்வெளி நோக்கி நகர்த்தத் தொடங்கினான்.

குறிப்பாக ரஷ்யர்கள் (முன்னாள் சோவியத்யூனியன்) விண்வெளிப் பயணத்தில் முன்னோடிகளாக விளங்கினர். ஆனால், அமெரிக்கர்கள் முக்கியமானவர்களாக அல்லது முதல் தரமானவர்களாக விரைவில் விண்வெளிப் பயணத்தில் திகழத் தொடங்கினர். இவர்கள் இருவருக்கும் போட்டியாகவே விண்வெளி மா்றத் தொடங்கியது. பனிப்போர்க் காலப்பகுதி முழுவதிலும் ஆரம்பம்

தரையைப் பங்குபோடுவதாக அமைந்தமையும், பின்னர் படிப்படியாக விண்வெளியில் பங்குபோடும் போட்டியாகவும் விளங்கியது. ஒரு வகையில் அரசியல் அதிகாரப் போட்டியின் அரங்கமாக விண்வெளி மாறியது. அக்காலப் பகுதியில் இரண்டு நாடுகளின் விண்கலங்களில் பிறநாட்டு விண்வெளி வீரர்கள் பயணம் மேற்கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. ஆனால், பொருளாதார நெருக்கடியால் சரிந்துபோன சோவியத் யூனியனின் தாய்க் குடியரசான ரஷ்யாவால் விண்வெளிப் போட்டியை எதிர்கொள்ளமுடியாதநிலை ஏற்பட்டது. தனது விண்வெளி வீரர்களைத் திருப்பி அழைத்துக்கொள்ளும் துயரச் சம்பவங்கள் யாவும் ரஷ்யர்களுக்கு ஏற்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் அமெரிக்கர்களது உதவியைக் கோரியிருந்ததுடன், அண்டவெளியில் நிரந்தரமாக நிறுவப்பட்ட விண் நிலையத்தினை அமெரிக்காவுக்கு வழங்கும் நிலையைக்கூட ரஷ்யா எதிர்கொண்டது. ஆனால், பின்னர் ஏற்பட்ட ரஷ்யாவின் ஆட்சி மாற்றமும், தொடர்ச்சியாக பல மில்லியன் டொலரை வழங்கிய தென் ஆபிரிக்கா நாட்டவரும், பிரபலமான அமெரிக்க வர்த்தகரும் விண்ணைச் சுற்றிவந்த நிகழ்வுக்கு பின்பு - ரஷ்யர்கள் தமது விண்வெளிப் பயணத்தினைத் தொடர்கின்றதை உணர முடிகின்றது. ஆனாலும் ரஷ்யர்கள் பலமாக இருக்கிறார்கள் என்று கூறிவிடமுடியாது. அமெரிக்கர் - ரஷ்யர்களுக்கு அடுத்த நிலையில் சீனர்கள், பிரான்ஸ் நாட்டவர், ஜேர்மனியர், இந்தியர்கள், ஜப்பானியர்கள் முதன்மையானவர்களாக உள்ளனர்.


சீனா அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளில் சந்திரனுக்கு மனிதனை அனுப்புவதெனத் திட்டமிட்டுள்ளதாகத தெரியவந்துள்ளது. அவ்வாறே, இந்தியர்களும் தற்போதைய இந்திய ஜனாதிபதியும் வேறுகோள்களைப் பற்றிய அதிக செய்திகளை வெளியிட்டு வருகின்றனர். ஏனைய நாடுகள் கூட்டாகவும் தனித்தும் சில முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. அந்தவகையில் உலகத்தின் முன்னணி நாடுகள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் அண்டவெளி தொழில்நுட்பத்திற்கான அவசியத்தை உணர்ந்துள்ளன.

அண்டவெளி நோக்கிய ஆய்வுகளும், பரிசோதனைகளும் ஆதிக்க அரசுகளின் அதிகாரத்தினைத் தக்கவைப்பதற்கான உபாயமாகவே அவை அண்டவெளியைக் கருதுகின்றன. அண்டவெளியை முதன்மைப்படுத்தி ஆய்வை மேற்கொள்ளும் அமெரிக்கா, தனது வல்லரசு என்ற உலகளாவிய அதிகாரத்தினை அண்டவெளியூடாகத் தக்கவைக்க முயன்று வருகின்றது. இதற்குச் சிறந்த உதாரணம், 1999 களிலிருந்து தயாரித்து வரும் தேசிய பாதுகாப்பு ஏவுகணைத் திட்டத்தினை (NMDS - National Missles Defence Systems) குறிப்பிடலாம். இது ஆரம்பத்தில் நட்சத்திர யுத்தம் (Star war) என ஜனாதிபதி றேகன் காலத்தில முன்வைக்கப்பட்ட திட்டத்தின் அபிவிருத்தியாக அமைந்தது. முதல் இரண்டு கட்டங்களில் NMDS பரீட்சை தோற்றுப்போனாலும், வில்லியம் புஷ் ஜனாதிபதியாக வருகைதந்த பின்பு அப்பரிசோதனை வெற்றிபெற்றதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. மேலும், அத்திட்டத்தை எதிர்த்து சீனா, ரஷ்யா என்பன அமெரிக்காவுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியமையும் குறிப்பிடத்தக்கது. இதனைச் சற்று விரி

**கே.ரி.கணேசலிங்கம்**

வாக நோக்குவோம்.

NMDS என்பது ஏவுகணைத் தொழில்நுட்பத்தில் மிகப்பிந்திய வடிவத்தைக் கொண்டது. இது அணுவாயுதங்களுக்குச் சமமானதாகவோ அல்லது அதற்கு ஒருபடி முன்னோக்கியதாகவோ கருதப்படுகின்றது. அந்தளவுக்கு NMDS வலிமையான இராணுவ - அரசியல் பரிமாணத்தை ஏற்படுத்தக்கூடியது. பொதுவாகத் தேசிய பாதுகாப்பு ஏவுகணை, அமெரிக்காவை நோக்கி வேறொரு நாட்டிலிருந்து ஏவப்படும் ஏவுகணையை - அமெரிக்காவின் கட்டுப்பாட்டிலுள்ள உளவு பார்க்கும் செய்மதிகளால், அதன் ஏவுகணைத் தளமொன்றுக்குத் தகவல் அனுப்பப்பட்டு, விரைந்து வரும் ஏவுகணையை - எதிர் ஏவுகணையால் புவிப் பரப்பிலிருந்து ஏறக்குறைய 230 - 250 கிலோ மீற்றருக்கு அப்பால் வானிலே வைத்து மோதித் தகர்த்தழிப்பதாகும். இதற்காக 2010 இற்கு இடையில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட செயற்கைக்கோள்களை அண்டவெளியில் நிறுவுவதென நாஸா தீர்மானித்துள்ளது. மேலும், NMDS என்றும் அழைக்கப்படும் திட்டத்தின் மூல கர்த்தா - அமெரிக்காவின் தற்போதைய பாதுகாப்புச் செயலாளரான டொனால்ட் ரம்ஸ்பீல்ட் என்பதும்,



விண்வெளி வீரர்களுக்கு மைதானத்தில்
அஞ்சலி செலுத்தும் விளையாட்டு வீரர்கள்

இத்திட்டத்தை நாஸா, சி. ஐ.ஏ., பென்ரகன் என்பன இணைந்து உருவாக்கியதென்பதும் கவனிக்கத்தக்கது.

எனவேதான் அமெரிக்காவின் அதிகாரப் போட்டியின் முதன்மை அம்சமாக NMDS என்பது நிறுவப்படுகிறதெனக் கருதப்படுகின்றது. விண்வெளித் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியைப் பயன்படுத்தி நாடுகள் தமது பாதுகாப்புத் திட்டத்தினை வடிவமைப்பதுடன், உலகளாவிய ரீதியில் அதிகாரத்தினைச் செலுத்துவதற்கும் பயன்படுத்துவதை உணரமுடிகின்றது. குறிப்பாக, அணுவாயுதத்தினையும் அதன் வெடிப்பிளவையும் கொண்டு மிக நீண்டகாலமாக வல்லரசுகள் தமது சக்தியை வெளிப்படுத்தி வந்தன. ஆனால், அத்தகைய

சண்டித்தனம் சில அரசுகளின் நடவடிக்கையினால் வலுக்குன்ற ஆரம்பித்தது. உலகத்தில் பல அரசுகள் அணுவாயுதத்தினைத் தயாரிக்க ஆரம்பித்தன. இதனைத்தடுக்க சக்தியுள்ள பல அரசுகள ஒன்று சேர்ந்து CTBT, NPT போன்றவற்றை ஐக்கிய நாடுகள் சபைக்கூடாக ஏற்படுத்த முயன்றன. ஆனாலும், 1998 களில் இந்தியா, பாகிஸ்தான் என்பன அணுவாயுதங்களைப் பரிசோதிததமையும், அதனை அமெரிக்க வல்லரசால் தடுக்கமுடியாமல்போனமையும், மாற்றுத் திட்டம் பற்றிய சிந்தனைக்கு வழிவகுத்திருந்தது. அதனை நிவர்த்தி செய்வதற்காகத் தயாரித்த திட்டமாகவே NMDS அமைந்துள்ளது. அமெரிக்கா இதனை தமது நாட்டில் மட்டுமல்ல, ஐரோப்பாவிலுள்ள டென்மார்க், பிரித்தானியா, நோர்வே போன்ற நாடுகளிலும் நிறுவத் திட்டமிட்டு வருகின்றது. இத்தகைய திட்டமிடலுக்குப் பின்னால் அரசியல், இராணுவத் தந்திரோபாயம் குவிந்துள்ளது.

ஏனெனில், NMDS திட்டத்தை முன்வைத்தபோது அது கூறிய காரணமாக -

சீனா, அமெரிக்காவை இலக்கு வைத்து நிறுத்தியுள்ள நீண்டதூர ஏவுகணைத் தாக்குதலை முறியடிப்பதெனவும், 2005 இற்கு இடையில் வடகொரியா தயாரிக்கவுள்ள நீண்டதூர ஏவுகணையை முறியடிப்பதென



கொலம்பியா விண்கலம்

வும் கூறியிருந்தது. ஆனால், அதனை ஐரோப்பாவில் நிறுவுவதற்கான காரணத்தை அமெரிக்கா கூறவில்லை. அமெரிக்காவால் அந்தக் காரணத்தை விட, தனது நலனெதுவும் காரணமாகக் கூறமுடியாது. அந்தளவில் அதன் அரசியல் பலத்தை உணர்ந்து கொள்ள முடியும். தொடர்ந்தும் ஐரோப்பாவைத் தனது செல்வாக்குக்குள் தக்கவைப்பதே அமெரிக்காவின் நோக்கமாகும்.

அண்டவெளி தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி முழு உலகத்திலும் வல்லரசான அமெரிக்காவின் அதிகாரத்தினைப் பேணுவதற்கான நடவடிக்கையாகவே அமைகின்றது. தற்போது அமெரிக்கா வளைகுடாப் பகுதியில் நிகழ்த்தவுள்ள ஈராக் தொடர்பான போரிலும் அதனையே அதிகம் பயன்படுத்த முனைகின்றது. போருக்கு நியாயம் கூறும் அமெரிக்க வெளிவிவகார செயலாளர் கொலின் பவல் - ஐ.நா.சபையில் முன்வைத்த ஈராக் தொடர்பான குற்றச சாட்டுக்கள் அனைத்துக்கும் அண்டவெளித் தொழில்நுட்பமே காரணமாகும். செய்மதிப் படங்களையும், புலனாய்வுத் தகவல்களையும் (ஒட்டுக்கேட்ட) ஆதாரப்படுத்த முயலும் அமெரிக்க அரசின் நடவடிக்கை, போரை எப்படித் தயார்செய்யும் என்பதை விளங்கிக்கொள்ளப் போதுமானது.

ஆப்கானிஸ்தான் போரிலும் அவ்வாறான தொழில்நுட்ப ஆயுதங்க



அஞ்சலி செலுத்தும் புஷ்

ளையே அதிகம் பயன்படுத்தியுள்ளது அமரிக்கா. அதனாலேயே அமெரிக்காவின் இராணுவத்திற்கு அதிக பாதிப்புக்கள் இல்லாததுடன் பாதுகாப்பான, வெற்றிகரமான தாக்குதலை அடைய முடிகின்றது. வியட்ணாம் யுத்தத்திற்குப் பின்பு அமெரிக்கா படைகளை விட தொழில்நுட்ப ஆயுதங்களையே அதிகம் பயன்படுத்த முயல்வதும், அது அமெரிக்க ஆட்சியாளருக்குப் பாதுகாப்பானதாகவும் அமையச் சந்தர்ப்பம் உண்டு என்பதை உணர்ந்துள்ளனர்.


அண்டவெளித் தொழில்நுட்பத்தின் வலுவிலேயே அமெரிக்காவின் உலகளாவிய அதிகாரத்தின் கணிசமான பகுதி தங்கியுள்ளது. அதற்காகவே அண்டவெளித் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றதே அன்றி, மனித உழைப்பின் விருத்திக்காக அல்ல. ஓரளவு சாத்தியப்பட்டாலும் முழுமையான அத்தகைய அடைவை நோக்கியதாக அமையுமென நம்ப முடியாது. 100 மில்லியன் அமெரிக்க டொலரைச் செலவுசெய்து தயாரிக்கப்படும் திட்டமே NMDS என்பதாகும். அதன் முதல் இரண்டு கட்டப் பரிசோதனையும் தோற்றுப்போனது என்பதையும் நினைவுபடுத்துதல் நன்று. எனவே, அண்டவெளி நோக்கிய வல்லரசுகளின் போட்டியில் ஒரு வெளிப்பாடுதான் கொலம்பிய விபத்து.


விஞ்ஞான அறிவியல் மாற்றங்களின் வளர்ச்சியானது பல புதிய அத்தியாயங்களை உருவாக்கியுள்ளது. அதன்படி மனிதர்கள் அண்டவெளிக்குச் செல்வதனைவிட, இயந்திரங்களே உரிய ஆய்வுகளைச் செய்துவரக்கூடியதாக அமைந்துள்ளது. செவ்வாய்க்குச் சென்ற பாத்பைன்டர் போன்று இயந்திரங்களை அனுப்புவது மனித அழிவுகளைத் தவிர்க்கவல்லது என்பதுடன், மனிதர்களின் வளப்பயன்பாடு வீணடிக்கப்படாது தவிர்க்கப்பட வாய்ப்பு உருவாகும். எமது பிராந்திய நாட்டவர் என்ற வகையிலும் அயல்நாட்டவர் என்ற வகையிலும், கல்பனா சல்வாவுக்கும், அவருடன் பயணமான ஏனைய விண்வெளி வீரர்களுக்கும் ஏற்பட்டநிலை இனியும் ஏற்படாது தவிர்ப்பதே முன்னோக்கிய மனிதசமுதாயத்திற்கு அழகாகும். இது சலஞ்சருக்கு பின்பும் ஏற்பட்டமை மனித சமுதாயத்தின் பலவீனத்தினையே வெளிப்படுததுகின்றது.

எனவே, விண்வெளிப் பயணம் அரசுகளின் வல்லரசுப் போட்டியினையும், அதன் வெளிப்பாடுகளையுமே அதிகம் பிரதிபலிக்கின்றது. அந்த வகையில் அமெரிக்காவின் வல்லரசு பலத்திற்கும், விண்வெளிப் பயணத்திற்கும் கொலம்பிய விபத்து பின்னடைவாகும். இது முழுமனித சமுதாயத்திற்கும் பின்னடைவான நிகழ்வாகும.



# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




**சனத் ரெறன் ஜயசூரிய**
**(அணித் தலைவர்)**
*பிறந்தது* - 30.9.1969 மாத்தறை.
*அணிகள்* - புளும் பீல்ட், இலங்கை.
இடதுகைத் துடுப்பாட்டம்
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் நியூஸி லாந்து (90/91 ஹமில்ரன்).
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் அவுஸ்ரேலியா (89/90)

பொறிபறக்கும் துடுப்பாட்டவீரர். 39 டெஸ்டில் 18 வெற்றி, 101 ஒருநாள் போட்டியில் 59 வெற்றி. எல்லோராலும் நேசிக்கப்படும் அணித்தலைவர்.

97/98 இல் டெஸ்டில் 340 (எதிர் இந்தியா), இலங்கையின் மிகப்பிரகாசித்த அணித்தலைவர். 15 ஓவருக்குள் நூற்றுக்கப் பால் ஓட்டங்கள் சேர்ப்பதைச் சாதித்துக் காட்டியவர் (ஆரம் பத் துடுப்பாட்டச் சோடியாக). மிகச்சிறந்த சகலதுறை வீரர். டெஸ்ட் -76, ஓட்டங்கள் 4789, சதம் 10, அரைச்சதம் 22, விக்கெட் 69, திறமை 5/43, ஒருநாள் போட்டிகள் - 287 ஓட்டங்கள் 8645, கூடிய ஓட்டம் 189, சதம் 15, அரைச்சதம் 52, விக்கெட் 234, திறமை 6/29, கண்ணியவான்.



**மார்வன் சாம்சன் அத்தபத்து**
**(துணைத் தலைவர்)**
*பிறந்தது* - 21.11.1970 களுத்துறை.
*அணிகள்* - SSC, இலங்கை.
வலதுகைத் துடுப்பாட்டம்.
**LEG BREAK**
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இந்தியா (90/91 சண்டிகார்).
*ஒருநாள் அறிமுகம்* - 90/91 நாக்பூர்.

மிக நம்பகமான துடுப்பாட்டம். பல ஆட்டங்களில் இவர் அச்சாணி. 1997 இல் தனது இடத்தை உறு திப்படுத்திக் கொண்டவர். தற்போது இவரது விக்கெட்டை எடுப்பது சுலபமல்ல. சிறிது **SLOW** என்று கருதப்படுவர். ஆனால் வெற்றி யின் அச்சாணி. 5 இரட்டைச்சதத்திற்கு உரியவர். டெஸ்ட் -61, ஓட்டங்கள் 3611, திறமை 223, சதம் 10, அரைச்சதம் 11, ஒருநாள் -180, ஓட்டங்கள் 5964, திறமை 132, சதம் 8, அரைச்சதம் 44, மெல்லெனப் பாயும் தண்ணீர்.

**மஹேல ஜயவர்தன**
*பிறந்தது* - 27.5.1977 கொழும்பு.
*அணிகள்* - SSC, இலங்கை.
வலதுகைத் துடுப்பாட்டம்
வலதுகை மிதவேகம்.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இந்தியா (97/98 கொழும்பு).
*ஒருநாள் அறிமுகம்*- எதிர் சிம்பாப்வே (97/98 கொழும்பு).



நம்பகரமான **EXCITING** துடுப்பாட்ட வீரர். அழகான பாணி. தலைவர் பதவி யும் தூரத்தில் அல்ல. 22 வயதில் உப தலைவராக இருந்தவர். அணியில் தவிர்க்கப்பட முடியாதவர். கூடியளவில் நிதானமான ஓட்டங்கள் குவிப்பவர், 47 டெஸ்ட், 3351 ஓட்டங்கள், கூடியது 242, சதம் 9, அரைச்சதம் 16, ஒருநாள் போட்டிகள் 131, ஓட்டங்கள் 3586, கூடியது 128, சதம் 6, அரைச்சதங்கள் 17. காக்கும் கரங்கள்.



**குமார் சங்கக்கார**
*பிறந்தது* - 27.10.1977 மாத்தளை.
*அணிகள்* - NCC, இலங்கை.
இடதுகைத் துடுப்பாட்டம்.
**OFF BREAK**
விக்கெட் காப்பாளர்.

அழகான துடுப்பாட்டம். அதிரடி ஓட் டக் குவிப்பு. நம்பகரமானவர். வேக மாக வளர்ந்து வருபவர். ஆக்ரோஷ மான விக்கெட் காப்பாளர். தனது சட்டத்துறைப் படிப்பையும் கைவிட மனமில்லை. பட்மின்ரன், ரெனிஸ் இரண்டிலும் தேசியரீதியில் சம்பியன் பட்டம் பெற்றவர். உலகக்கிண்ணச் சாதனைகளில் இவரின் பெயரும் இருக்க இடமுண்டு. 4 டெஸ்ட் சதம். இவரின் கணக்கில் உண்டு. இளங்கன்று துள்ளும்.

**அரவிந்த டி சில்வா**
*பிறந்தது* - 17.10.1965 கொழும்பு
*அணிகள்* - ஆக்லண்ட் (நியூ), கென்ட் (இங்), NCC, இலங்கை.
வலதுகைத் துடுப்பாட்டம். .
வலதுகை **OFF BREAK**
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இங்கிலாந்து (84, லோர்ட்ஸ்)
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் நியூஸிலாந்து (83/84 மொரட்டுவ).



டெஸ்ட் -93, ஓட்டங்கள் 6361, கூடி யது 267, சதம் 20, அரைச்சதம் 22, ஒருநாள் - 298, ஓட்டங்கள் 9017, கூடி யது 145, சதம் 11, அரைச்சதம் 62, உலகத்தரம் வாய்ந்த துடுப்பாட்ட வீரர். 96 உலகக்கிண்ணத் தொடரில் 4 ஆட்ட நாயகன் விருதுகள், ஒரு சதம். இலங்கைக்கு இவரின் கிரிக்கெட் சேவை அளப்பரியது. உலகக்கிண்ணம் 2003 இறுதி கிரிக்கெட் போட்டிகளாக அமையலாம். இன்னும் நிறையக் கிரிக்கெட் இவரிடம் உண்டு. விக்கெட்டுக்கு முன் னால் இவர் இரும்புத்திரை.

***விடை இங்கே:*** **இலங்கை 398/5 எதிர் கென்யா (1996)**



**ரஸல் பிரேமகுமாரன் ஆர்னல்ட்**
*பிறந்தது* - 25.10.1973 கொழும்பு.
*அணிகள்* - NCC, இலங்கை.
இடதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை **OFF BREAK.**
*டெஸ்ட் அறிமுகம்*- எதிர் பாகிஸ்தான் (96/97 கொழும்பு).
*ஒருநாள் அறிமுகம்*- எதிர் தென்னா பிரிக்கா (97/98 லாகூர்).

டெஸ்ட் - 43, சதம் 3, அரைச்சதம் 10, ஒருநாள் -109, ஓட்டங்கள் 2705, கூடியது 103, சதம் 1, அரைச்சதம் 25.

தற்போது சிறிது குறைந்த **FORM** ஆரம்பத் துடுப்பாட்டவீரராகத் தொடங்கி மத்திய வரிசையில் ஆடுபவர். ஒருநாள் போட்டிகளில் நன்கு சோபிப்பவர். இறுதி யாக விளையாடிய டெஸ்டில் ஆரம்பத் துடுப்பாட்டவீரராக 62 மற்றும் 109 எடுத்தவர். நம்பகரமானவர். பார்வையாளர்க ளைக் குளிர்மையாக்கலாம். நாவடக்கம் வேண்டும்.

**ஜெஹான் முபாரக்**
*பிறந்தது* - 10.1.1981 வொஷிங்ரன்.
*அணிகள்* - CCC, இலங்கை.
இடதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை **OFF BREAK.**
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் பங்களா தேஷ் (2002 கொழும்பு).
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் தென்னா பிரிக்கா (2002 தெ.ஆபிரிக்கா).



அணியின் புதுமுகம். ஒருநாள் ஆட்ட அனுபவம் ஐந்து மட்டும். திறமை களைத் தன்னகத்தே கொண்டுள்ள சகல துறை விரர். துடுப்பாட்டமே பிரதானம். உற்சாகம் கிடைக்கும் பட்சத்தில் இலங்கை அணிக்கு எதிர்கால வரப்பிரசாதம். முகவரி மறைவதில்லை.

# இலங்கை







**அவிஷ்க குணவர்தன**
*பிறந்தது* - 26.05.1977 கொழும்பு.
*அணிகள்* - NCC, SSC, இலங்கை.
இடதுகைத் துடுப்பாட்டம்.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் பாகிஸ்தான் (98/99 லாகூர்)
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் சிம்பாப்வே (97/98 கொழும்பு)

இவர் மந்திரத்தால் மாங்காய் விழுத்த வேண்டும் என்று தெரிவாளர்களால் எதிர்பார்க்கப்பட்டவர். இதனால் ஆட்ட எண்ணிக்கைகள் குறைவு. சிறந்ததொரு ஆரம்பத்துடுப்பாட்ட வீரர். நிறைந்த விளையாட்டு ஆற்றல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளவர். இம்முறை தென்னாபிரிக்காவில் சோபிப்பதன் மூலம் தெரிவா ளர்களையும் பழிவாங்கலாம். 22 முதற்தர ஆட்டங்கள், 6 சதங்கள், 24 அரைச்சதங்கள் உள்ளன. பலிக்கடா.

**ஹஷான் திலகரட்ண**
*பிறந்தது* - 14.07.1967 கொழும்பு.
*அணிகள்* - NCC, இலங்கை.
இடதுகைத் துடுப்பாட்ட வீரர்.
வலதுகை **OFF BREAK**
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் அவுஸ்ரேலியா (89/90 ஹோபார்ட்).
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இந்தியா (86/87 சார்ஜா)



அனுபவம் வாய்ந்தவர். இடைவெ ளியின் பின் அணியில் சேர்க்கப்பட்ட வர். சில இளைஞர் மீதான ஏமாற்றம் இவருக்கு அதிர்ஷ்டம். சிறந்த களத் தடுப்பாளர். நம்பகரமான துடுப்பாட்ட வீரர். நம்பகத்தன்மையை தக்கவைத்துக்கொள்ள வேண்டும். டெஸ்ட் -73, அதிகூடியது 204, சதம் 10, அரைச்சதம் 18, ஒருநாள் -188, அரைச்சதம் 12. அதிர்ஷ்டசாலி.



**முத்தையா முரளிதரன்**
*பிறந்தது* - 17.04.1972 கண்டி.
*அணிகள்* - தமிழ் யூனியன், லங்கா ஷயர் (இங்), இலங்கை.
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை **OFF BREAK.**
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் அவுஸ்ரேலியா (92/93 கொழும்பு).
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இந்தியா (93/94 கொழும்பு)

மிதவேகப் பந்துவீச்சாளராக ஆரம் பித்து 14 வயதில் **OFF BREAK**யை வாலாயப்படுத்தியவர். முறை தவறிய பந்து வீச்சுத் தொடர்பில் ஓரங்கட்ட முயற்சித்தும் தன் தளராத முயற்சியால் டெஸ்ட் வரலாற்றிலேயே சிறந்த பந்துவீச்சாளர் எனப் பெயர் பெற்றவர்.

அவுஸ்ரேலியாவுக்கு இவர் என்றால் அலர்ஜி. சந்தோஷ மான பிறவி. அதீத திறமைசாலி. டெஸ்ட் - 78 விக்கெட் 473, திறமை 9/51, ஒருநாள் - 203, விக்கெட் 304, திறமை 7/30, அசைக்க முடியாதவர். **SMILING KILLER.**



**சமிந்த வாஸ்**
*பிறந்தது* - 27.01.1974
*அணிகள்* - CCC, இலங்கை.
இடதுகைத் துடுப்பாட்டம்.
இடதுகை **FAST MEDIUM.**
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் பாகிஸ்தான் (94/95 கண்டி)
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இந்தியா (93/94 ராஜ்கோட்)

அணியின் முதற்தரப் பந்துவீச்சாளர். நட்சத்திர ஆட்டக்காரர், இவருக்குத் துணையாகப் பந்துவீச அணியில் ஆள் இல்லை. ஒருநாள் சாதனை - 8/19, எதிர் சிம்பாப்வே. 200 டெஸ்ட் விக்கெட் கடந்தவர். கீழ்வரிசையில் வந்து அதிரடியாக ஓட்டம் குவிப்பதிலும் வல்லவர். இவர் இன்றி அணியில்லை. இவருக்குப் பொறுப்புக் கள் இரண்டு. ஒன்று, அணியை வெல்லவைப்பது, மற்றது ஏனைய மிதவேகப் பந்துவீச்சாளர்களை நெறிப்படுத்துவது. 210 ஒருநாள், 255 விக்கெட். போராட அஞ்சாத முரட்டுக்காளை.

**தில்ஹாரா பெர்ணான்டோ**
*பிறந்தது* - 19.07.79 கொழும்பு.
*அணிகள்* - SSC, இலங்கை.
வலதுகை **FAST MEDIUM.**
வலதுகைத் துடுப்பாட்டம்.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் பாகிஸ்தான் (99/2000 கொழும்பு)
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் தெ.ஆ. (2000/01 பார்ல் - தெ.ஆபிரிக்கா)



திறமைக்குக் குறைவில்லை **OVER STEPPING,** திசை தெரியாத பந்து வீச்சுக்களைக் கட்டுக்குள் கொண்டு வரவேண்டும். வாசுடன் இணைந்து இவரே அணியை நிமிர்த்த வேண்டும். **MRF** நிறுவனத்தில் (சென்னை) பந்துவீச்சுப் பயின்றவர். தொடர் வழிகாட்டல்மூலம் உன்னத நிலையடை வார். 13 டெஸ்ட், 33 விக்கெட், 5/42 திறமை. 45 ஒருநாள், 64 விக்கெட், 4/48, திறமை துணியாத ஆர்வம்.

**புலஸ்த்தி குணரட்ண**
*பிறந்தது* - 27.09.1973 கொழும்பு.
*அணிகள்* - புளும்பீல்ட், தமிழ் யூனியன், இலங்கை .
வலதுகை **FAST MEDIUM.**
வலதுகைத் துடுப்பாட்டம்.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் பங்களாதேஷ் (2002 கொழும்பு)



பிந்திய நுழைவு. சில இளைஞர்க ளைப் பின்தள்ளி அணிக்குள் இடம் ஒருநாள் போட்டி 17, விக்கெட் 23, பந்துவீச்சு முறையின் சந்தேகம் இவ ரின் பிந்திய நுழைவுக்குக் காரணம். மிகப்பொறுப்புடன் அணிக்குப் பக்க பலமாக இருக்க வேண்டும். இவரின் வயது அப்படி. இன்றேல் இதுவே இறுதிச் சுற்றுப்போட்டியாக இருக்கும். அழுங்குப் பிடியாக இருக்கவேண்டும்.

**பிரபாத் நிஸ்ஸங்க**
*பிறந்தது* - 25.10.1980 அம்பலாங்கொட.
*அணிகள்* - மாத்தறை வி.க, புளும்பீல்ட், இலங்கை.
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை **MEDIUM FAST.**
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் பாகிஸ்தான் (2001/02 சார்ஜா.)



வயதில் இளையவர். வேகப்பந்து வீச்சுப் பொறுப்பு, 11 ஒருநாள் போட்டி, 12 விக்கெட். இவர் எதிர்காலத்தில் நிரந்தர இடம் பிடிப்பார் என்று எதிர்பார்க் கப்படுகின்றார். காயங்கள், உபாதைகள் இவரைப் பாதித்தன. **MRF** சென்னையில் பயின்றவர். தென்னாபிரிக்கச் சுற்றுப் ப்பயணத்தில் எதிர்பார்க்கப்படுபவர். சண்டைச் சேவல்.



**சரித்த புத்திக**
*பிறந்தது* - 22.08.1980 பாணந்துறை.
*அணிகள்* - பாணந்துறை வி.க, இலங்கை.
வலதுகை **FAST MEDIUM**
வலதுகைத் துடுப்பாட்டம்.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் மே.இ (2001/02 காலி)
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் சிம்பாப்வே (2001/02 சார்ஜா)

எட்டு நாட்கள் **OVERAGE.** இதனால் 19 வயதின் கீழ் அணியில் வாய்ப் பிழந்தவர். இன்று தேசிய அணியில் ஒரு வீரர். படிப்படியாக தன் வேகத்தை அதிகரித்து வருபவர். உலகக்கிண்ணம் இவருக்கு சர்வதேசத்தரப் பந்துவீச்சாளர்க ளின் பந்து வீச்சு அனுபவத்தைக் கொடுக்கும். 9 டெஸ்ட்கள், 14 ஒருநாள் ஆட்டங்களில் ஆடியவர். சண்டைக்கு இணைச் சேவல்.

## நாளும் ஒரு வினா

**உலகக் கிண்ணப் போட்டி ஒன்றில் அதிகூடிய ஓட்டம் பெற்ற அணி எது?**

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



ஜேர்மன் பிரதி வெளிவிவகார அமைச்சர் கலாநிதி வொல்கர் ஸ்ரான்ஸை, விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசியபோது எடுக்கப்பட்ட படம்.

புலிகளுடன் இணைந்து கொண்ட

# 3 சிறார்கள் பெற்றோரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டனர்

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்துகொண்ட, பதினெட்டு வயதிற்குட்பட்ட மூன்று சிறுவர்கள் நேற்று யாழ்.மாவட்ட அரசியற்துறைச் செயலகத்தில் வைத்து அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தலைமையில் நேற்றுமாலை 3 மணியளவில் மேற்படி நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது பதினெட்டு வயதிற்குட்பட்ட இரு சிறுவர்கள், ஒரு சிறுமி அவரது பெற்றோரிடம் கையளிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட அதிகாரி ஒலே புருண்டம், யுனிசெப் யாழ்.மாவட்ட வதிவிடப் பிரதிநிதி செலின் லொகோபிரட் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## கண்காணிப்பு...

நீதியான முறையில் நடந்துகொள்ளவில்லை என கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளார்.

பல்வேறு ஊடகங்களும் இச்சம்பவத்தை பல்வேறு வழிகளிலும் திரிபுபடுத்தி செய்தியை வெளியிட்டதாகக் குற்றஞ்சாட்டிய அவர்,

ஆயுதக்கடத்தலை விடுதலைப் புலிகள் மேற்கொண்டதாகவும் போர் நிறுத்தத்தைப் புலிகள் மீறியதாகவும் மேற்படி ஊடகங்கள் உண்மைக்குப் புறம்பான தகவலை வெளியிட்டதாகவும் மேலும் கூறினார்.

கடற்படையினர் உண்மை நிலையை மறைத்ததாகக் கூறிய கலாநிதி அன்ரன் பாலசிங்கம், அரசாங்கத்தரப்பினரிடம் இச்சம்பவத்தின் மீதான விடுதலைப் புலிகளின் கடுமையான ஆட்சேபத்தை நேரடியாகத் தெரிவித்தார்.

அதேவேளை - இச்சம்பவத்தினால் அமைதி முயற்சிகள் குழப்பமடையாது என்றும் அது தொடரப்படும் எனவும் விடுதலைப் புலிகள் தரப்பு நிலைப்பாட்டை வெளியிட்டார்.

இந்த முதலாவது அமர்வு 12.30 மணிவரை நீடித்தது.

பின்னர் ஐரோப்பிய நேரப்படி மாலை 3 மணிக்கு ஆரம்பமான இரண்டாவது அமர்வு மாலை ஆறு மணி வரை நீடித்தது.

இதன்போது, சிறார்களை படைக்குச் சேர்ப்பதான விடயம் பற்றி ஆராயப்பட்டது. தாம் அவ்வாறான ஆட்சேர்ப்பில் ஈடுபடுவதில்லை என்பதுடன் தாமாகவே விருப்பின்படி புலிகளுடன் இணைய வரும் சிறார்களும் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டு வருவதாக விடுதலைப் புலிகள் உறுதியாகத் தெரிவித்தனர்.

இந்த விடயத்தில் தவறான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதையும் புலிகள் தரப்பினர் சுட்டிக் காட்டினர்.

அதேவேளை ஐ.நா. சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அண்மைய முயற்சிகள் பற்றி இரு தரப்பினரும் பாராட்டுத் தெரிவித்தனர்.

இன்றைய பேச்சுக்கள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி 12 மணி வரை நடைபெறவுள்ளது.

இன்று மாலை 3 மணியளவில் ஐந்தாம் கட்டப் பேச்சுக்கள் பற்றிய பத்திரிகையாளர் மாநாடு நடைபெறவுள்ளது.

# காணாமற்போனோரின் உறவினர் தொடர்புகொள்ளுமாறு அறிவித்தல்

கடந்தகால இராணுவ நடவடிக்கையின்போது, இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் தொடர்பாக, யாழ்.பொலிஸ் நிலையம் அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

இந்த அறிவித்தலின்படி, பின்வரும் பெயர்களையுடையவர்களின் உறவினர்களை அல்லது பாதுகாவலர்களை உடனடியாக யாழ். பொலிஸ் நிலையத்திற்கு சமூகம் தரும்படி கேட்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் தொடர்ச்சியாக இவ் விசாரணைகள் இடம்பெறவுள்ளன.

உறவினர் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ள காணாமற் போனோர் விபரம் வருமாறு:-

அ.அசோக் (கைதடி), அ.கிறிஸ்ரி ஜெயந்தன் (கொழும்புத்துறை), அ.ஜீவகுமார் சிறிதரன் (குருநகர்), அ.கலிஸ்ரஸ் (சுதுமலை தெற்கு மானிப்பாய்), அ.ஜூட் பாக்கியநாதன் (பாஷையூர்), அ.கேதாரகௌரி (கைதடி), அ.சாள்ஸ் (யாழ்ப்பாணம்) , அ.உதயகுமார் (யாழ்ப்பாணம்), எவ்.எக்ஸ்.றொசான் (கொழும்புத்துறை), ஜி.பரமநாதன் (அரியாலை), எச்.எச்.குணாளன் (திருநெல்வேலி), ஜ.தியாகராஜா (அரியாலை), யே.வாலன்ரீன் (நாவாந்துறை), க.தேவராஜ் (அரியாலை), எம்.ஹரிகரன் (அரியாலை), மீ.தவராஜா (அரியாலை), ம.மதிகரன் (அரியாலை), ஆர்.ஆர்.லீபனன் (யாழ்ப்பாணம்), ஆர்.சுரேஸ்வரன் (யாழ்ப்பாணம்), எஸ்.வசந்தகுமார் (அரியாலை), ச.சந்திரசேகரன் (அரியாலை), ச.பரஞ்சோதி (திருநெல்வேலி), சதீஸ்வரன் (திருநெல்வேலி), செ.செல்வராஜ் (யாழ்ப்பாணம்), சு.கமலசோதி (அரியாலை), ரி.எஸ்.ஜேம்ஸ் சதீஸ் (குருநகர்), தர்னவாசகர் (அரியாலை), துரைகதி (அரியாலை), வி.மைக்நெட் குலசேகரம் (குருநகர்), வ.சபாரட்ணம் (அரியாலை), ந.விநாசித்தம்பி (அம்பலவன் பொக்கணை), ர.கந்தசாமி (மாத்தளன், முள்ளிவாய்க்கால்), ப.முத்துராசா (பள்ளிப் பெருமாள்காடு வட்டக்கண்டல்), சி.ஆறுமுகம் (அம்பலவன்போக்கணை, முள்ளிவாய்க்கால்), கொ.முத்தலிப்பு (யாழ்ப்பாணம்).

(க,லி)

## தமிழ் கணினிக் கண்காட்சி

இன்றும் நாளையும் "தமிழ் கணினிக் கண்காட்சி-2003" யாழ்.மத்திய கல்லூரி அரங்கத்தில் காலை 10 மணி முதல் மாலை 8 மணிவரை நடைபெறவுள்ளது.

இன்றைய நவீன கணினித் தொழில்நுட்பத்தை தமிழிலேயே அனைவரும் எளிமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இந்தக் கண்காட்சி அமைந்துள்ளதென்று அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## நெடுந்தீவு கந்தசுவாமி ஆலய உற்சவம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கு கரமந்தைக் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இன்று காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 நாட்கள் நடைபெறும். 17 ஆம் திகதி காலை இரதோற்சவமும் நடைபெறும்.

(113)

## கடற்படை...

கண்காணிப்புக்குழு கேட்டுக்கொண்டதற்கு அமைவாக கடற்படையினரை மறுத்து கண்காணிப்புக் குழுவினரைச் சோதனையிடச் சொல்லப்பட்டது. சோதனையின் பின் ஆயுததளபாடங்கள் எதுவுமே இல்லையென உறுதிப்படுத்தப்பட்டபின்பும் தொடர்ந்துசெல்ல கடற்படையினர் அனுமதிக்கவில்லை.

இந்நிலையில், எமது விரைவுப் படகை கரைக்குப் போகும்படியும் தாங்கள் பிரச்சினையைக் கடற்படையினருடன் கதைத்து சீர் செய்து போராளிகளையும் வள்ளத்தையும் கரைக்கு கொண்டு வந்து தருவதாக யாழ்.கண்காணிப்புக்குழுவினரால் கிளிநொச்சி அரசியல் தலைமைப் பணிமனைக்கு உறுதிமொழி வழங்கப்பட்டது.

நண்பகலில் டோறா அருகில் வந்தபோது, விரைவுப் படகிலிருந்த முன்னணிப்பாதுகாப்பு ஆயுதம் மீன்பிடி வள்ளத்தில் கழற்றி வைக்கப்பட்ட பின்பே விரைவுப்படகு டோறாவுக்கு அருகில் சென்று விபரத்தைக் கூறியிருந்தது.

மாலை கண்காணிப்புக் குழுவினர் வந்த பின்பு அவர்கள் விரைவுப் படகை வள்ளத்திற்கு அருகில் செல்ல அனுமதிக்காததால் ஆயுதத்தை வள்ளத்திலேயே விட்டுவிட்டு இரவு எமது படகு கரைக்கு வந்து விட்டது. மீன்பிடி வள்ளம் தொடர்ந்தும் அவ்விடத்திலேயே நங்கூரமிட்டு நின்றது.

07.02.2003 நேற்றுக் காலை மீண்டும் மீன்பிடி வள்ளத்தை கண்காணிப்புக்குழுவினர் சோதனையிட்டனர். அதன்போது வள்ளத்திலிருந்த விரைவுப்படகின் பாதுகாப்பு முன்னணி ஆயுதத்தைக் கண்டு விளக்கம் கேட்டபோது, வள்ளத்தில் நின்றவர்களால் விபரம் கூறப்பட்டது. அதை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். அது விரைவுப் படகின் முன்னணி ஆயுதம் என்பது சிறிலங்கா கடற்படையினருக்கும் தெரியும்.

தொடர்ந்து பெய்த மழையினால் கரைக்கும் வள்ளத்திற்குமான வானொலித் தொடர்பு காலை 8.30 மணியளவில் தடைப்பட்டுவிட்டது. இதற்குப் பின்னர் மீண்டும் கரையிலிருந்து எமது விரைவுப்படகு வள்ளத்தை நோக்கிச் சென்றவேளை டோறாவில் நின்ற கண்காணிப்புக் குழுவினர் கிளிநொச்சி தலைமைப் பணிமனைக்கு காலை 10 மணியளவில், எமது விரைவுப் படகைத் திருப்பி அழைக்குமாறும தாங்களே வள்ளத்திற்கும் எங்களுக்குமான தொடர்பை ஏற்படுத்தித் தருவதோடு நிலைமையை சீர்செய்து மூன்று போராளிகளையும் வள்ளத்தையும் கடற்படையினர் தம்மோடு குறிகாட்டுவானுக்கு அழைத்துச் செல்லாதவாறும் எம்மிடம் மீள ஒப்படைப்பதாகவும் காலை 11 மணிக்கு தலைமைப் பணிமனைக்கு ஊடாக எமக்கு அறிவித்தனர்.

காலை 8.30 மணியளவில் எமக்கும் வள்ளத்திற்குமான தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில் கண்காணிப்புக் குழுவினின் உறுதிமொழியில் முழுமையான நம்பிக்கை வைத்து மூன்று போராளிகளையும் மீன்பிடி வள்ளத்தையும் அவர்கள் பொறுப்பில் விட்டுவிட்டு எமது விரைவுப் படகு கரைக்குத் திரும்பிவிட்டது.

இந்நிலையில் அங்கு நடைபெற்ற சம்பவங்கள் யாவும் கண்காணிப்புக் குழுவினருக்கு மட்டுமே தெரியும்.

மீண்டும் மதியம் 1.30 மணியளவில் கண்காணிப்புக்குழுவினர் கிளிநொச்சி தலைமைப் பணிமனைக்கு, சிறிலங்காவின் நேரப்படி 12.45 மணியளவில் போராளிகள் தம்மை வள்ளத்தோடு சேர்த்துத் தீயிட்டுக் கொளுத்திவிட்டதாகத் தெரியப்படுத்தினர்.

06.02.2003 மாலை மூன்று மணியிலிருந்து எமது மூன்று போராளிகளையும் பொறுப்பேற்ற கண்காணிப்புக்குழுவினரிடம், சிறிலங்கா கடற்படையினர் வள்ளத்தைச் சோதனையிட்டாலோ அன்றில் குறிகாட்டுவானுக்குக் கொண்டு செல்ல முற்பட்டாலோ போராளிகள் வள்ளத்துடன் சேர்த்து தம்மையும் அழிப்பார்கள் என உறுதியாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கு கண்காணிப்புக்குழுவினர், அப்படியேதும் நடைபெறாது எனக்கூறித் தாமே சோதனையிட்டனர் என்பதும் போராளிகளையும் வள்ளத்தையும் மீள எம்மிடம் ஒப்படைப்பதாக உறுதியளித்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தில் எமது போராளிகள் மூவர் வீரச்சாவடைந்துள்ளனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விடுமுறை தினங்களில் கடைகளை மூடவும்!

## வணிகர்கழகம் அறிவிப்பு

விடுமுறை தினங்களில் வர்த்தக நிலையங்களை திறந்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாமென யாழ்.வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வணிகர் கழகம் பத்திரிகைக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

யாழ்.வணிகர் கழக எல்லைக்குட்பட்ட பகுதியில் சில வர்த்தக நிலையங்கள் அறிவுறுத்தல்களுக்கு மாறாக - விடுமுறை தினங்களில் கடைகளைத் திறந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதாக சில வர்த்தகர்கள் முறைப்பாடு செய்து வருகின்றனர். ஒரு சில வர்த்தகர்களின் இந்த நடவடிக்கையால் ஏனைய வர்த்தகர்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

எனவே, இனிவரும் காலங்களில் வர்த்தக நிலையங்களினை சனிக்கிழமைகளில் மூன்று மணிக்கும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் போயா தினங்களிலும் முழு நாளும் மூடுமாறு கடந்த 5ஆம் திகதிநடைபெற்ற புதிய நிர்வாகக் கூட்டத்தின் போது முடிவு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# நெடுந்தீவுச் சம்பவத்தை மூடிமறைக்க முயற்சியாம்

## ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

நெடுந்தீவுக் கடலில் இடம்பெற்ற சம்பவத்தை மூடிமறைக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்துக்கு உரிய கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி தெரிவித்தபோதும், அதற்குரிய நடவடிக்கை எடுக்காததுதான் நேற்று நடைபெற்ற சம்பவத்துக்கு காரணம் என்றும் ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

## நெடுந்தீவு...

பாதிக்காது. இரு தரப்பினரும் அமைதி வழி மூலம் பேச்சுவார்த்தை நடாத்தி அரசியல் தீர்வு எட்டுவதில் உறுதியாக உள்ளோம்.

இலங்கையின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க கடற்படை தம்மாலியன்ற அனைத்தையும் செய்துவருகின்றது என்பதை இந்தச் சம்பவம் காட்டுகின்றது.

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் தமது கடமையைச் சரிவரச் செய்திருக்கிறார்கள். கண்காணிப்புக்குழுவினர் சோதனையிடுவது சம்பந்தமாக அந்தப் படகில் உள்ள விடுதலைப்புலிகளுக்கு சரிவரத் தெரிவிக்கப்படவில்லை. இந்தச் சம்பவம் பற்றி விடுதலைப் புலிகளோடு விவாதித்து வருகிறோம் என்றார்.

## தமிழர் தாயக...

துக்க தினத்தை அனுஷ்டிக்கும்படி யாழ்ப்பாண மாவட்ட மாவீரர் ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

INVITATION

The Director, Course Director and Staff of the IIS cordially invite our patrons, well wishers, friends, parents and students.

to the

**7th Institute Day**

celebration at the Jubilee hall St. Johns' college, Jaffna

on

Saturday 8th February 2003 at 9.00 am.

Institute of informatics studies
100.clock tower road, Jaffna.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.02.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.